விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை (11.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023




# யாழ்-கண்டி ஏ-9 பாதை நேற்று உத்தியோகபூர்வமாகத் திறப்பு

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ் - கண்டி ஏ-9 பாதை நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் அப்பாவித் தமிழர்கள் பலியாகி விடக் கூடாது

### ஐ.நா. வலியுறுத்தல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையே நடந்துவரும் யுத்தத்தில் அப்பாவி தமிழர்கள் பலியாகி விடாமல் இலங்கை அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து ஐ.நா. அகதிகள் ஏஜன்சியின் செய்தித் தொடர்பாளர் ரான்ரெட் மாண்ட் கூறுகையில், இலங்கையில் தற்போது கடும் சண்டை நடந்து வரும் பகுதிகளில் அப்பாவி தமிழர்கள் பலியாகி விடாமல் இலங்கை அரசு பார்த்துக் கொள்ளவேண்டும்.

அப்பாவி (14ஆம் பக்கம் பார்க்க)


# முரசுமோட்டையில் பயங்கரம் 7 பொதுமக்கள் சுட்டுக்கொலை!

கிளிநொச்சியிலுள்ள முரசுமோட்டைப் பகுதியில் வைத்து ஏழு பொதுமக்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் துயரச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. பொதுமக்களை சுட்டுக்கொன்றவர்கள் தொடர்பில் படைத் தகவல்களும் வன்னித் தகவல்களும் முரண்பட்டதாக அமைந்துள்ளன. கொலைசெய்யப்பட்ட ஏழு பொதுமக்களினதும் உடலங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முரசுமோட்டைப் பகுதியிலுள்ள இராணுவ முன்னரங்குப் பகுதியை நோக்கிச் சென்ற பொதுமக்களிலேயே ஏழு பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் ஏனையவர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. (ந)

## இந்தியா கேட்டால் பிரபாவை ஒப்படைப்போம்

### அமைச்சர் போகொல்லாகம



(கொழும்பு)

இராணுவத்தினரால் பிரபாகரன் கைது செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரிக்கை விடுத்தால் அதனைச் சாதகமாகப் பரிசீலிக்க தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் போகொல்லாகம கூறினார்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லையென அவர் குறிப்பிட்டார். (02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமான ஓடுபாதை முல்லைத்தீவில் கண்டுபிடிப்பு

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு களப்பிலிருந்து 5 கிலோ மீற்றர் மேற்கே உள்ள விடுதலைப் புலிகளின் விமான ஓடுபாதையை அந்தப் பகுதியில் படை நடவடிக்கையை மேற்கொண்டுள்ள 59ஆவது படையணி கண்டுபிடித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த விமான ஓடுபாதை 2.5கிலோ மீற்றர் நீளத்தையும் 100மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

விமான ஓடுபாதையுடன் விமானத்தரிப்பிடங்கள் (02ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த படுகொலை கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண முயற்சிக்கும் நிலையில் அரச பாதுகாப்புத் தரப்புத் தொடர்பாகவும் ஊழல்கள் தொடர்பாகவும் லசந்த செய்திகளை வெளியிட்டு வந்தார்.

இந்நிலையில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் சுட்டுக் கொல்லப்பட்ட விதத்தில் லசந்தவும் சுட்டுக் கொல்லப்பட்டுள் (14ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் அனைத்து மக்களும் தம்மை பாதுகாப்பு அமைச்சில் பதியவேண்டும்

### இணையத்தளத்தின் மூலமாகவும் பதிவு செய்யலாமாம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மக்களும் பாதுகாப்பு அமைச்சில் தமது முழுவிபரங்களையும் பதிவுசெய்துகொள்ளவேண்டும் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறான பதிவு நடைமுறை ஒன்றை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

மக்கள் இப் பதிவுகளை இணையத் தளத்தின் மூலமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம், பணிப்பாளர் ஹுலு கல்லவின் கையொப்பத்துடன் ஊடக அறிக்கை (02ஆம் பக்கம் பார்க்க)

## சிவ்சங்கர் மேனன் கொழும்பு வருவார்

# பிரணாப் முகர்ஜியின் வருகைக்கான ஆயத்தங்கள் எதுவுமில்லை

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இரண்டு நாள் விஜயமாக தைப் பொங்கல் அன்று கொழும்பு வரவுள்ளார்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு தைப்பொங்கல் அன்று இந்திய வெளியுறவுச் துறைச்செயலாளர் சிவ்சங்கர் மேனன் கொழும்பு வருகின்றமை வழமையான இருதரப்பு உறவுகள் மற்றும் சார்க் கட்டமைப்புத் தொடர்பானதே. அதற்கு மேல் இந்த விஜயத்தில் குறிப்பிடத்தக்கவிடயம் ஏதும் இல்லையென்றும் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஒட்டி இலங்கை அரசுடன் பேசுவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை விரைவில் கொழும்பிற்கு தாம் அனுப்புவார் என ஓரிரு தினங்களுக்கு முன்னர் கூட சென்னையில் வைத்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்திருந்தாராயினும் அவ்வாறு வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வருவதற்காக ஆயத்தங்கள் ஏதும் செய்யப்படவில்லையென தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.



என்றாலும் சார்க் அமைப்பின் அமர்வொன்றில் பங்கு பற்றுவதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பெப்ரவரி மாதத்தில் கொழும்பிற்கு வருவதற்கான வாய்ப்பு உண்டு என்றும் அந்த உத்தேச விஜயத்தை அவர் மேற் கொண்டாலும் அதற்கும் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான விவகாரத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (ந-5)

## இரணைமடுவில் கடும் மோதல்

இரணைமடுவில் இருந்து வட்டக்கச்சி நோக்கி நேற்றைய தினம் படையினர் மேற்கொண்ட முன் நகர்வின் போது படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இரணைமடுவில் இருந்து வட்டக்கச்சி நோக்கி ஆட்லறி எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் முறியடிப்புத்தாக்குதல் நடத்தியதாகவும் 18 படையினர் பலியானதுடன் 40க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்ததாகவும் பி.பி.சி செய்திச் சேவை தெரிவித்தது.

இதேவேளை இரணைமடுப் பகுதியில் 3 சடலங்களையும் முரசுமோட்டையில் 11 சடலங்களையும் கைப்பற்றியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ந)

## வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எதிர்க்கட்சித் தலைவர்கள் குழுவொன்று வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்துள்ளது.

ஊடக சுதந்திரம் மற்றும் இலங்கையில் ஊடகத்துறைக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்தே ரணில் விக்கிரமசிங்க தலைமையில், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் ஏற்பாட்டாளர் மங்கள சமரவீர ஆகியோர் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்தனர்.

அமெரிக்கா, ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மக்களின் தகவலறியும் உரிமை குறித்து உரியகவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக இராஜதந்திரிகள் உறுதியளித்திருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. (ந-5)

## சாவகச்சேரியில் பாலர் பாடசாலை

(சாவகச்சேரி)

அமெரிக்கன் மிசன் திருச்சபையால் சாவகச்சேரியில் தூய தோமஸ் பாலர் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பாலர் பாடசாலையின் தொடக்க நிகழ்வு பங்குத் தந்தை வண.பி.ஜே.சூரியகுமார் தலைமையில் இடம்பெற்றது.

தென்மராட்சி வர்த்தகர் சங்க பொருளாளர் ரவி பாலர் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். (ந-29)


## விற்பனைக்கு

பழந்தமிழ் இலக்கண, இலக்கிய, சமய, புராண, இதி காசநூல்கள் 1939-2008 வரையான (பைன்டிங்) பஞ்சாங்கம், பித்தளை தாம்பாளங்கள்...

தபாலில் or பி.ப.6.00 பின்
A. ஜெயகணேஷ்
அரசடி வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (2087)


## இந்தியா...

பிராபகரனை ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கம் இன்னமும் உத்தியோக பூர்வமாகக் கோரிக்கை விடுவிக்கவில்லையெனச் சுட்டிக்காட்டிய போகொல்லாகம இந்தியாவிலுள்ள சில தனிநபர்களே இவ்வாறான கோரிக்கையை முன்வைத்திருப்பதாகக் கூறினார்.

இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து சர்வதேச சமூகம் நன்கு அறிந்து கொண்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இல்லை என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது என்றார் அமைச்சர் ரோகித போகொல்லாகம. (ந-5)

## புலிகளின்...

இரண்டையும் கட்டிடங்களையும் பாதுகாப்புத் தரப்பினர் கண்டுபிடித்துள்ளதாக பிரிகேடியர் உதய நாணயக்கார குறிப்பிட்டார்.

படையினரால் கைப்பற்றப்பட்ட ஓடுபாதை அமைந்திருந்த பகுதியில் மிதி வெடிகள் புதைக்கப்பட்டிருந்ததாகவும் இந்த விமான ஓடுபாதையுடன் பாதுகாப்புத் தரப்பினர் விடுதலைப் புலிகளின் 4 விமான ஓடுபாதைகளைக் கண்டுபிடித்துள்ளதாகவும் பிரிகேடியர் உதய நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ந-4)

## — படையினரால் மீட்ட பகுதிகளில் — முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த வேண்டும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீள குடியேற்றப்பட வேண்டும் என பெருந்தெருக்கள் அமைச்சர் அத்தாவுல்லா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செலயகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம் மக்களும் பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டிய அமைச்சர், யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், தமது உறவினர்களின் இல்லங்களிலும் தங்கியிருக்கும் முஸ்லிம்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

வடக்கில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான அனைத்து உடைமைகளும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளவில்லையெனக் குறிப்பிட்ட அத்தாவுல்லா அதன் பலாபலன்களை அவர்கள் இப்போது அனுபவிப்பதாகக் கூறினார். (ந-5)

## இடம்பெயர்வின்போது வாகன விபத்து தாயும் இரண்டு மாதக் குழந்தையும் பலி

### சூண்டிக்குளத்தில் பரிதாபம்

வன்னிப் பகுதியில் பொதுமக்கள் இடம் பெயர்ந்து சென்றவேளை வாகன நெருக்கடியில் சிக்குண்டு தாயும் இரண்டு மாதக் குழந்தையும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சூண்டிக்குளம் சந்தியில் நேற்றுமாலை 4 மணியளவில் இடம்பெற்ற இத் துயரச்சம்பவத்தில் ஜெயக்குமாரி (வயது 29) இவரின் இரண்டு மாத பெண் குழந்தை சரண்யா ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவ்விபத்துச் சம்பவத்தின்போது நவரத்தினம் பிரபாகரன் (வயது 30), இசைநிலா (வயது 3) ஆகியோர் காயமடைந்தனர். (ந-5)

## நாட்டின் அனைத்து...

ஒன்றை நேற்று மாலை அனுப்பிவைத்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமையை கருத்தில்கொண்டு நாட்டிலுள்ள அனைத்துப் பொதுமக்களையும் பதிவுசெய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலான இந்த நடவடிக்கை பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தமது முழுவிபரங்களையும் வழங்குவதன் மூலம் பாதுகாப்பு அமைச்சில் தம்மைப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

இது மிகவும் கட்டாயமானதாகும். இப்பதிவு நடைமுறையை இலகுபடுத்துவதற்காக இணையத்தளம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. www.citizens.lk என்ற இணையத்தளத்தில் உள்ள படிவத்தைப் பூர்த்திசெய்வதன் மூலம் நபரொருவர் தம்மைப் பதிவு செய்துகொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி இணையத் தளத்தில் குறித்த நபரின் வீட்டின் விபரம், குடும்ப விபரம், அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் விபரம் தற்காலிகமாக தங்கியிருப்பபோர் தொடர்பான தகவல்கள் என்பன கோரப்பட்டுள்ளன. (ந-5)

### உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிரிழந்தவர்களின் நினைவு தினம் அனுஷ்டிப்பு




உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது உயிரிழந்தவர்களின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக அமைந்துள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்ற நினைவுதின நிகழ்வை புளொட் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் லோ.கஜன், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் யாழ். பிராந்திய செயலாளர் சி.மோகன், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த இரா.தங்கையா ஆகியோர் கலந்துகொண்டனர். (ந)

# திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் செயற் திட்டங்கள்

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றம் எஸ்.டி.சி (SDC) நிறுவனத்தின் அனுசரணையில் சிறுவர் செயற்திட்டங்களை அண்மையில் ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாக ஐந்து கஷ்டப் பிரதேசங்களை பிரதேச செயலகங்களூடாக தெரிவு செய்து பிரதி சனி, ஞாயிறு தினங்களில் அப்பகுதி சனசமூக நிலையங்களை சேர்ந்த சிறார்களை திருமறைக் கலாமன்ற வளவாளர்கள் வழிநடத்துகின்றனர்.

அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் வருமாறு,கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையமும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இமையாணன் கலைமகள் ச.ச.நிலையமும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் சின்னமடு சனசமூக நிலையமும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சில்லாலை வேளாங்கன்னி சனசமூக நிலையமும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குப்பிளான் தெற்கு அறிவொளி சனசமூக நிலையமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சிறுவர் கலைக்கூடத்தினை 90 களில் ஆரம்பித்த திருமறைக் கலாமன்றம் இவ் வருடம் மேலும் தனது பணிகளை விரிவாக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-51)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு மாசி மாதம் ஆரம்பமாகவிருக்கும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்பிரிவு, சாதாரணபிரிவு பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 10ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் எனவும், இம்மாதம் 24ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கூட்டுறவு பயிற்சிக்கல்லூரி அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4)

## வருடாந்த பொதுக் கூட்டம்

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் அனைத்து சங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-134)

◆◆◆◆

(திருநெல்வேலி)

திருநெல்வேலி மத்தி வடக்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தில் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதுவருட நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருநெல்வேலி முத்துத் தம்பி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-134)

## இலங்கை வங்கி செயற்பாட்டு முகாமையாளர் நியமனம்

(பருத்தித்துறை)

இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ். உலகநாதன் சேவையிலிருந்து இளைப்பாறுவதையடுத்து இலங்கை வங்கியின் யாழ். அதி மேற்படிக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய எஸ். ஜெயேந்திரா இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் இலங்கை வங்கி யாழ். அதி மேற்றரக் கிளை முகா மையாளராக இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து பருத்தித்துறை இலங்கை வங்கியின் உதவி முகாமையாளர் திருமதி சுமங்களா பிராபகரன் பருத்தித்துறை இலங்கை வங்கி யின் முகாமையாளராகப் பொறுப்பேற்கவுள்ளார். (ஓ-51)



கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் க.ஸ்கந்தபாபு, நலன் விரும்பியாளர் த.தர்மகுலசிங்கம், வித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணாகரன் ஆகியோர் விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## வாய்க்கால் செப்பனிட கோரிக்கை

(கோண்டாவில்)

கோண்டாவில் புகையிரத நிலைய வீதி வெள்ள வாய்க்கால் பழுதடைந்தும் சில இடங்களில் தூர்ந்து போயும் உள்ளது.

வாய்க்காலினுள்ளே மரம், செடி, கொடிகள் வளர்ந்துள் ளதுடன் புனரமைப்பு வேலைகளும் அரை குறையாகவே நடைபெற்றுள்ளது.

வாய்க்கால் கட்டுக்கள் உயர்த்தி அமைக்கப்படாமையால் மழைகாலங்களில் வீதி எது, வாய்க்கால் எது என அடையாளம் காண முடிவதில்லை.

இதனால் பயணிகள் குறிப்பாக அரச உணவுக் களஞ்சியத்திற்குச் சென்று வரும் லொறிகள் சிரமப்படுவதை காணமுடிகின்றது.

கோண்டாவில், உரும்பிராய் பகுதி வெள்ளம் இவ் வாய்க்கால் வழியாகவே வழிந்தோடுவதால் வாய்க்காலை செப்பனிட்டு வருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-36)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்ச்சித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை 10 மணிக்கு இதுவரை காலமும் தொடர்ந்து சொற்பொழிவு நடாத்திய பெரியார்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (6-35)

## நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு புகையூட்டல் நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார அதிகாரி பணிமனையினரால் நுளம்புப் பெருக்கத்தை கட்டப்படுத்துவதற்காக புகையூட்டும் நடவடிக்கை J/300 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட இடங்களில் மேற்கொள்வதற்குரிய எரிபொருள் செலவை சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், அகிலாண்டம் சனசமூக நிலையத்தினரும் இணைந்து வழங்கி அப்பகுதியில் புகையூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ-29)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வேலையற்ற பட்டதாரிகளுக்குமான பதிவுகள் மேற்கொள்ளுதலும், கலந்துரையாடலும் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ்.பெருமாள் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளதால், வேலையற்ற பட்டதாரிகளை அவ்விடத்தில் ஒன்றுகூடுமாறும் சமகமளிப்போர் தமது (Statement Copy) பல்கலைக்கழக சான்றிதழ் பிரதி கொண்டுவரும்படியும் ஏற்கனவே பதிவுசெய்து வேலை கிடைக்காதவர்களையும் மீள்பதிவு செய்துகொள்ளுமாறும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் புதிய செயற்குழு கேட்டுக்கொள்கின்றது. (ஓ

## வாரம் ஒரு தகவல்

## நாய் கடித்தால்...

" என்ன சேர் இது? நாயும் கையுமா எங்கே கிளம்பிட்டீங்க?"

"புதுசா இந்த நாயை வாங்கினேன். ஆஸ்பத்திரிக்குப் போய் இதற்கு ஓர் ஊசியைப் போட்டுவிட்டு, அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று இந்தப் பக்கமாக வந்தேன்"

"எதற்காக ஊசி போட்டீங்க?"

"வீட்டில் வளர்க்கும் பிராணிகளுக்கெல்லாம் ஊசி போட்டுக் கொள்வது நல்லது. அதுதான் நமக்குப் பாதுகாப்பு. கடித்தாலும் ஆபத்தில்லை"

"அதுசரி, நாய் கடித்துவிட்டது என்று டாக்டரிடம் போனால் கடித்த நாய் உயிரோடு இருக்கிறதா?... என்று தானே முதலில் கேட்கிறார். ஏன் அப்படி?"

"கடித்தது வெறிபிடித்த நாயா, நல்ல நாயா என்று தெரிந்து கொள்வதற்குத்தான்! "

"அது எப்படித் தெரிந்துகொள்வது?"

"வெறிபிடித்த நாய்க்கு ஆயுள் 10 நாட்கள் தான் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சிலசமயம் இது கொஞ்சம் கூடும் - குறையும் அவ்வளவு தான்! கடித்த நாய் 10 நாட்களுக்குள் இறந்துவிட்டால் அது நிச்சயமாக வெறி பிடித்த நாய்தான் என்று முடிவுசெய்து கொள்ளலாம். கடிபட்டவருக்கு அதற்கான சிகிச்சையை செய்யலாம்."

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால், தெரு நாய் கடித்து விட்டால் அதை அடித்துக் கொன்றுவிடக் கூடாது போலிருக்கே!"

"ஆமாம்! அப்படி செய்து விட்டால் அது தானாக சாகிறதா இலலையா என்பதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?"

"நீங்க கில்லாடி சேர்"

" ஏன் அப்படிச் சொல்றீங்க?"

" நீங்கள் நாய் வாங்கியதும் முதல் வேலையாக அதற்கு ஊசி போட்டு விட்டீர்களே!"

" புதியவர்கள் யாரையாவது கடித்துவிட்டால், அவர்களுக்கு தொந்தரவு வராமல் இருக்கவேண்டுமே. அதற்காக அப்படிச் செய்தேன்"

"புதியவர்களை இது கடிக்குமா?"

" அதைத் தெரிந்துகொள்ளத்தான் உங்கள் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

11.01.2009
(மார்கழி 27, ஞாயிற்றுக்கிழமை)
புநர்பூசம் முன்னிரவு 8.53 மணிவரை
பூரணை முற்பகல் 10.17 மணிவரை
இராகுகாலம் 5.03- 6.33 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபசெய்சி, முயற்சி தாமதம், மனப்பயம், ரோகநிலை. |
| இடபம் | போசனசுகம், பிரயாண நன்மை, தனவருவாய், காரிய அனுகூலம். |
| மிதுனம் | அதிக செலவு, குடும்பக் கவலை, உணர்ச்சிவசப்படல், வேலைச்சுமை. |
| கடகம் | புதிய முயற்சி, கல்வியில் ஆர்வம், பெரியோர் சந்திப்பு, போசனசுகம். |
| சிங்கம் | சுபசெலவு, சயனசுகக் குறைவு, மனஸ்தாபம், பிரயாணம். |
| கன்னி | கீர்த்தி, தனவருவாய், விருந்து பசாரம், எடுத்தகாரியம் கைகூடும். |
| துலாம் | காரியசித்தி, நண்பர்கள் உதவி, தொழில் மேன்மை, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | எதிர்பாராத செலவு, பிரயாணம், புதிய திட்டமிடல், முயற்சிதாமதம். |
| தனுசு | காரிய தடங்கல், போசனசுகம், பயந்த சூழல், ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | முயற்சிபலிதம், பொருள் சேர்க்கை, போசனசுகம், சென்ற இடத்தில் செல்வாக்கு. |
| கும்பம் | மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், உடல்நலம், சத்துருஜெயம். |
| மீனம் | வியாபார விருத்தி, வேலைச்சுமை, கௌரவக்குறைவு, குடும்பக் கவலை. |

வளவன்

## அகதி வாழ்க்கை

அகதி வாழ்க்கை அது
அலைகடலின்...
படகு வாழ்க்கை
சோகங்கள் தலையிலமர்ந்து
எம்மை நசுக்கி விழுங்கும்...
வாழ்க்கை
பள்ளிக்கூடம் போகாமலே
பட்டினியைக் கற்கும்...
வாழ்க்கை
மானத்தை விலை பேசி
இரப்பையை நிரப்பும்...
வாழ்க்கை
அகங்கார மாந்தரெல்லாம்
ஒரு பிடியரிசிக்காய் கெஞ்சும்...
வாழ்க்கை
உயிர் ஊசலாடியும்
சடலம்போல் வாழும்...
வாழ்க்கை
மொத்தத்தில் ஆண்டவனிட்ட...
நியதி வாழ்க்கை
இந்த அகதி வாழ்க்கை

ச.ரமேஸ்குமார், மீசாலை கிழக்கு

# திரை விமர்சனம்



# பஞ்சாமிர்தம்

கடவுள்கள், தேவர்கள், அரக்கர்கள் அவதரித்த ஆதி காலத்திற்கும், கலியுகம் என சொல்லப்படும் இந்தக் காலத்திற்கும் நிறைய சம்பந்தம் இருக்கிறது என்பதை சொல்ல வந்திருக்கும் படம் பஞ்சாமிர்தம்...!

ஒரே குருகுலத்தில் பயிலும் புராண காலத்து மாரீசனுக்கும், இடும்பனுக்கும் குருவின் மகளை யார் திருமணம் செய்துகொள்வது என்பதில் விரோதம். அதற்குள்ளாக இருவரும் வெவ்வேறு புராண கால சம்பவங்களால் சபிக்கப்பட்டு கால் சலங்கையாகவும், பெரும் மலையாகவும் பூமியில் புதையுண்டிருக்கின்றனர். அவர்கள் நிகழ்காலத்தில் வாழும் ஜீவன்கள் சிலர் கைப்பட மீண்டும் புராண உருவெடுத்து தங்களுக்கு உதவியவர்களுக்கு தங்களிடமுள்ள அபார சக்தி மூலம் உதவுகின்றன. மீண்டும் மாரீசனும், இடும்பனும் மோதிக்கொள்ளும் சூழல்! இருவரில் யார் ஜெயித்தது? குருவின் மகள் என்ன ஆனார்? அந்தப் புராண காலத்து இருவர் இங்கு யார், யாருக்கு உதவுகின்றனர்? என்பதை நகைச்சுவையாக சொல்லியிருக்கிறார் இயக்குநர்.

நாயகனாக அரவிந்த் ஆகாஷ், நாயகியாக சரண்யா மோகன்.இரட்டை வேடத்தில் நாசர். மாரீசனாக ஜெயராம். இடும்பனாக படத்தின் இயக்குநர் ராஜு ஈஸ்வரன், கசாப்பு கடைக்காரர்களாக கருணாஸ், கஞ்சா கருப்பு, நாசரின் சொத்துக்கு அலையும் எம்.எஸ்.பாஸ்கர் எனப் பலர் நடித்துள்ளனர்.

ஆரம்ப காட்சிகளில் கொஞ்சம் புராண கதை! அதன் பின் ஒட்டுமொத்த படத்தையும் ஒரு ஊட்டி தேயிலை எஸ்டேட்டில் படம் பிடித்திருக்கும் புதியவரான இயக்குநர் ராஜு ஈஸ்வரன் தன் இடும்பன் நடிப்பைப் போன்றே இயக்கத்திலும் ஜெயித்திருக்கிறார். ஆனால் பல இடங்களில் குழந்தைகளைக் கவரும் விதத்தில் கிராபிக்ஸ் காட்சிகள் மூலம் செலவுகளையும் இழுத்து வைத்திருக்கிறார்.






சுந்தர். சி. பாபுவின் பாடல்களில் இருக்கும் பலம், பின்னணி இசையில் இல்லாதது வருத்தம். பிரமோத் வர்மாவின் ஒளிப்பதிவு ஊட்டியின் அழகை மீண்டும் பறைசாற்றியுள்ளது.

பஞ்சாமிர்தம் : *குழந்தைகளுக்கு அறுசுவை உண(ர்)வு*

## ஷாருக்கானுக்கு குறிவைக்கும் அசின்





கோலிவூட்டில் தடம் பதித்துவிட்டு பாலிவூட் பக்கம் போயிருப்பவர் நடிகை அசின். இந்தியில் அமீர்கானுடன் ஜோடி சேர்ந்து நடித்த இந்தி கஜினி படம் வெற்றியடைந்த சந்தோஷத்தில் இருக்கிறார் அசின். இதனைத்தொடர்ந்து அவர் பாலிவூட்டில் தனது இடத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் முனைப்பில் திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறார். இதன் பலனாக சல்மான்கான் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். அமீர், சல்மானைத்தொடர்ந்து ஷாருக்கானுக்கு குறி வைத்திருக்கிறார் அசின். இந்தியின் அனைத்து முன்னணி ஹீரோக்களுடனும் ஜோடி போட்டு விடவேண்டும் என்ற இலட்சியத்துடன் செயல்பட்டு வருவதாக சமீபத்தில் ஒரு பேட்டியில் அசின் தெரிவித்திருக்கிறார்.

## கோடிகளை அள்ளும் கஜினி



பாலிவூட் நடிகர் அமீர்கான் நடித்து சமீபத்தில் வெளியான படம் கஜினி. அப்படம் வெளியான முதல் வாரத்திலேயே உலக அளவில் 16கோடி ரூபாய்க்கு மேல் வசூலாகியுள்ளது. 22 நாடுகளில் வெளியிடப்பட்ட இப்படம் வெளியான முதல் வாரத்தில் வட அமெரிக்காவில் 5கோடியே 60 இலட்ச ரூபா வசூலானது. அதற்கடுத்தபடியாக மேற்கு ஆசியாவில் 3கோடியாக 68 இலட்சம் ரூபாய் வசூலானது. அவுஸ்திரேலியாவில் படம் வெளியானமுதல் வாரத்தில் 78 இலட்சத்து 74ஆயிரம் ரூபாய் வசூலானது.



## சினி துளிகள்

♦ கலாப காதலன் படம் மூலம் தமிழில் அறிமுகமான நடிகை அக்ஷயாவுக்கு உண்மையிலே தெலுங்கில் ஏராளமான பட வாய்ப்புகள் வருகின்றன. ஆனால் அம்மணி தற்போது தமிழில் எங்கள் ஆசான், மறுஅவதாரம் உள்ளிட்ட படங்களில் நடித்து வருவதால் தமிழில் நல்ல கேரக்டர்கள் பண்ணிவிட்டுத்தான் தெலுங்கு பக்கம் வருவேன் என்று கூறி வருகிறாராம்.

♦ ஏழாம் நூற்றாண்டு சரித்திரக் கதையில் உருவாகும் மர்மயோகியில் அதிகபட்ச ஹொலிவூட்டைச் சேர்ந்த டெக்னீஷியன்களை நியமித்துள்ளார் கமல். மேலும், இதுவரை தனது ஆடை வடிவமைப்பாளராக கௌதமியை நியமித்து வந்தவர், இப்படம் மூலம், தயாரிப்பு ஆடை மற்றும் நகை வடிவமைப்பாளராகவும் கௌதமிக்கு பிரமோஷன் கொடுத்துள்ளார்.

♦ சூர்யா , விக்கிரம், விஷால் போன்ற நடிகர்கள், உடம்பை சுருக்கி, பெருக்கி, முறுக்கி, வளைத்து கொள்கின்றனர். இதைப் போன்றே நடிகர் அர்ஜுனும், துரை படத்திற்காக தனது உடலமைப்பை மாற்றினார். இவரைத் தொடர்ந்து சரத்குமார், சுந்தர்சி, பிரசன்னா ஆகிய நடிகர்களும் தங்கள் உடம்பை கும்மென்று வைத்து கொள்ள, "ஜிம்"மே கதி என்று கிடக்கின்றனர்.

♦ விருது வாங்கிய பிறகு, விஜய், சூர்யா என்ற நடிகர்களுடன் அவசர சந்திப்பு நிகழ்த்தியுள்ளார் பிரியாமணி. என்ன விஷயம் என்று கேட்டபோது, அவர்கள் என்னுடன் டூயட் பாட ஆவலாக இருக்கின்றனர். நேரம், காலம் ஒத்துவரவில்லை என்று கவலைப்படுகின்றனர் என்று சொல்கிறார்.

இதனால் அடுத்தபடியாக மேற்படி நடிகர்களுக்கும், தனக்கும் பொருத்தமான கதை வைத்திருக்கும் இயக்குநர்களுக்கும் வலைவீசி வருகிறார்.

## மீண்டும் வந்தார் கனிகா



திருமணத்துக்கு பிறகு சினிமாவில் நடிக்க மாட்டேன் என்று சொல்லி கோடம் பாக்கத்தை காலி செய்துவிட்டு சென்ற எத்தனையோ நடிகைகள் அடுத்த சில ஆண்டுகளில் சினிமாவில் நுழைந்து அக்கா, அண்ணி கேரக்டரிலாவது நடிக்க வாய்ப்பு கேட்பார்கள். அல்லது சின்னத் திரையில் காலூன்றி சாதித்து காட்டுவார் கள். அப்படிப்பட்டவர்கள் மத்தியில் கல் யாணமான சில மாதங்களிலேயே திரை யுலகிற்கு திரும்பி வந்து ரசிகர்கள் மனதில் பால் வார்த்திருக்கிறார் நடிகை கனிகா. தமிழில் எதிர்பார்த்த அளவு பட வாய்ப்புகள் இல்லாததால் இல்லற வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த கனிகாவுக்கு, தற்போது மலையாளப் படம் ஒன்றில் நடிக்க வாய்ப்பு தேடி வந்துள்ளது. ஜெயராம் ஜோடியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்ததால் அதனை மறுக்காமல் ஏற்றுக்கொண்ட கனிகா, சட்டென ஓ.கே.சொல்லிவிட்டாராம்.

விரைவில் சூட்டிங் தொடங்கவுள்ளது. தமிழில் நல்ல பாத்திரங்கள் கிடைத்தால் நடிக்கத் தயார் என்று ஒரு ஸ்டேட்மெண்ட்டையும் விட்டி ருக்கிறார் கனிகா.

## வில்லுவில் வடிவேலு பாடிய பாடல்



எட்டணா இருந்தா எம்பாட்ட எட்டூர கேட்கும்... என்று வடிவேலு பாடிய பாடலுக்கு இசையமைப்பாளர் தேவிஸ்ரீ பிரசாத் ரொம்பவும் ரசிகராம். அதன் விளைவு .... தான் இசையமைக்கும் வில்லு படத்தில் வடிவேலுவின் சொந்தக்குரலில் ஒரு பாடலைப் பதிவு செய்திருக்கிறார் அவர். வாடா மாப்பிள்ளை எனத் தொடங்கி தொடரும் அந்தப் பாடலை பின்னணி பாடகர் திப்புரீடா ஆகியோருடன் சேர்ந்து நடிகர் வடிவேலு பாடி அசத்தியிருக்கிறாராம்.

## காவ்யா மாதவனுக்கு கல்யாணம்



நடிகை காவ்யா மாதவனுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் தேதி கொல்லூர் மூகாம்பிகை கோயிலில் திருமணம் நடைபெற உள்ளது.

தமிழில் காசி, என் மனவானில், சாது மிரண்டா உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் மலையாள நடிகை காவ்யா மாதவன். இவருக்கும் கேரள மாநிலம் காயங்குளத்தைச் சேர்ந்த நிஷால் சந்திராவுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு உள்ளது.

மலையாளப் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்துள்ள நிஷால், துபாயில் பணி யாற்றி வருகிறார். கர்நாடகா மாநிலத்தில் உள்ள கொல்லூர் மூகாம்பிகை கோயிலில் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி இவர்களது திருமணம் நடைபெறுகிறது.

# இலங்கையில் தமிழர் 37

## ஆதி இரும்புக் காலம்

அனுராதபுரத்தில் மட்டுமன்றிப் பொம்பரிப்பிலும் எலும்புக் கூறுகளை ஆய்வு செய்த மானிடவியலாளர் அங்கு இடைக்கற்கால மக்களுக்கும் புதிய பண்பாட்டைச் சேர்ந்த ஆதி இரும்புக்கால மக்களுக்கும் இடையில் உயிரியல் அடிப்படையிலான ஒற்றுமைகளைக் காட்டியுள்ளனர். இத்தகைய சான்று காட்டுவது என்னவெனில், புதிய பண்பாடு முன்பிருந்த இடைக்கற்கால மக்கள் மத்தியில் பரவியது என்பதே.

### தம்பபண்ணியின் மறைவு

அனுராதகாமத்தின் எழுச்சியால் தம்பபண்ணி வீழ்ச்சியுற்றது என்றே தோன்றுகிறது. தொடக்கத்தில் அநுராதகாம என்ற பெயரைக் கொண்டிருந்த இந் நகர மையம் (கிரேக்க - உரோமர் குறிப்பிடும் Anouragrammon ) ஆதி இரும்புக் காலப் பண்பாட்டின் ஓர் அம்சமாகிய நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை விரைவில் ஏற்று, வளமுடைய ஒரு குறுநில அரசாக மாறி, வலுப்பெற்று வளரத் தொடங்கியது.

இத்தகைய வளர்ச்சி ஆதி இரும்புக் காலத்தின் தொடக்க காலத்திலேயே ஏற்படத் தொடங்கியது எனலாம். அதேவேளையில் வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வளரத் தொடங்கிய வணிகத்தின் பலன்களையும் இக் குறுநில அரசு பெற்று முன்னேறத் தொடங்கியது. இவ் வணிகம் வடமேற்குத் துறையாகிய மாதோட்டம் எழுச்சி பெற உதவியது எனலாம். இதனால் முக்கியத்துவம் பெற்ற மாதோட்டத் துறையையும் அனுராதபுரம் தன் ஆதிக்கத்திற்குள் அடக்கியது.

அனுராதபுரத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த குழுவினர் பிராகிருத மொழியை ஏற்றதுடன், சமஸ்கிருதமயமாக்கத்துக்கும் ஆளாகினர்.

பழைய பாளி வரலாற்றேடுகள் கூறும் விஜயன் கதைகளிலிருந்து வரலாற்றுச் சான்று எதுவும் பெறமுடியுமாயின், வட இந்தியாவிலிருந்து வந்த ஓர் உயர் குழாத்தினர் முதலில் தம்பபண்ணியில் ஆதிக்கம் பெற்றனர் என்றும் பின்னர் அவர்கள் வழிவந்தோர் அனுராதபுரத்துக்கு தங்கள் ஆதிக்க பீடத்தை மாற்றினர் என்றும் கூறலாம். விஜயன் கதை மற்றும் பண்டுகாபயன் கதை ஆகியவற்றில் இடம்பெறும் பாண்டியர் தொடர்பு தம்பபண்ணிக்கும் எதிர்க்கரையில் இருந்த மதிரைக் குறுநில அரசுக்கும் இடையில் இருந்த தொடர்புகள் மற்றும் உறவுகள் ஆகியவற்றைக் காட்டுகின்றது எனலாம். மதிரையைச் சேர்ந்த பாண்டிய மரபினர் தம்பபண்ணியில் ஆதிக்கம் செலுத்திய மரபினருடன் உறவு கொண்டிருப்பர். காலப் போக்கில் பாண்டிய மரபைச் சேர்ந்த ஒருவன் தம்பபண்ணியில் ஆதிக்கம் பெற்று, அங்கிருந்து தன் ஆதிக்க பீடத்தை அனுராதபுரத்துக்கு மாற்றியிருக்கலாம். பொ. ஆ.மு. 300 அளவில் அனுராதபுரம் இலங்கையில் இருந்த குறுநில அரசுகளுள் மிகவும் வலிமை வாய்ந்த அரசாக எழுச்சி பெற்றது எனலாம்.

### கால வரன்முறை

கடந்த 35 ஆண்டுகளாக நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் விளைவாக ஆதி இரும்புக் காலத்துத் தலங்களின் காலத்தை நம்பகமான முறையில் நிர்ணயிக்கக் கூடியதாய் உள்ளது. இந்த ஆய்வுகளை நடத்தியோருள் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள் விமலா பெக்லி, ஸிரான் தரணியகல, பெனனெற் புஹொன்ஸன், எப்.ஆர்.ஆல்ச்சின்,றொபின் கோனிங்ஹம் ஆகியோராவார். இவர்கள் ஆய்வுகளின் விளைவாக முன்னர் செய்யப்பட்ட காலக் கணிப்புகள் மாற்றப்பட்டுப் புதிய கணிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இதை ஒத்த வகையில் தமிழ் நாட்டிலும் புதிய ஆய்வுகளின் விளைவாகக் காலக் கணிப்புகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதால், முழுத் தென்னிந்தியா- இலங்கைப் பிராந்தியத்தின் தொல்லியல் சான்றுகளை வைத்து ஆதி இரும்புக் காலத்து முன்னேற்றங்களை நோக்க முடிகின்றது.

இலங்கையிலுள்ள ஆதி இரும்புக் காலத் தலங்களுள் மிகப் பழமையானது என்று கொள்ள முடியாவிட்டாலும், அனுராதபுரம் கடந்த நாற்பதாண்டுக் காலத்தில் பல தொல்லியலாளர்களுடைய ஆய்வுகளுக்கு இலக்காகிய ஓர் இடமாகும். இக்காரணத்தினால், மிகப் பழைய ஆதி இரும்புக்காலத் தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாக அனுராதபுரம் சிறப்புப் பெறுகிறது. ரேடியோகாபன் கணிப்பு முறையைப் பயன்படுத்திப் பெறப்பட்ட காலக் கணிப்புகளின் அடிப்படையில் ஸிரான் தரணியகல அனுராதபுரத்தின் வரலாற்றுத் தொடக்க கால (இரும்புக் கால)ப் பகுதியின் ஆரம்பம் பொ.ஆ.மு.900 என 1992 இல் கணிப்புச் செய்தார். இதனைப் பின்னர் அனுராதபுரத்தில் அகழ்வாய்வு நடத்திய பிரித்தானியத் தொல்லியலாளர் குழுவினர் உறுதிப்படுத்தினர். இக் குழுவினருள் றொபின் கோனிங் ஹம் மற்றும் எப்.ஆர்.ஆல்ச்சின் ஆகியோர் இருந்தனர். இதற்குப் பிற்பட்ட கணிப்புகளின் அடிப்படையில் அனுராதபுரத்தில் ஆ.இ.காலத்தின் தொடக்கத்தை ஏறத்தாழ பொ.ஆ.மு.1000 என ஸிரான் தரணியகல கருத்துத் தெரிவித்துள்ளார். அதுமட்டுமின்றி, மேலும் ஆய்வுகள் நடத்தப்படும் போது தென்னிந்தியாவிற் போன்று இலங்கையிலும் ஆதி இரும்புக் காலம் பொ.ஆ.மு.1200 அளவில் தொடங்கியது என்ற முடிவுக்கு வர இடமுண்டு என்று அவர் கருதுகின்றார்.

வேறு இடங்களிலிருந்து கிடைக்கும் ரேடியோகாபன் காலக் கணிப்புகளைக் கொண்டும் இலங்கையில் ஆதி இரும்புக் காலம் இற்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியிருக்கலாம் எனக் கொள்ள முடியும். இப்பன் கட்டுவ என்ற இடத்தில் நடத்திய அகழ்வாய்வின் போது பெறப்பட்ட தொல்பொருட்களின் ரேடியோகாபன் காலம் பொ.ஆ.மு. 800க் குக்

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கிட்டியதாகத் தெரிய வருகின்றது.

கந்தரோடையிலும் இதை ஒத்த காலம் ரேடியோகாபன் கணிப்பு மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. பொம்பரிப்பில் பெருமளவு ஆதி இரும்புக் காலச் சவ அடக்கங்களும் தொல்பொருட்களும் கிடைத்திருந்த போதும், இதுவரை திட்டவட்டமான காலக் கணிப்புகள் செய்யப்படாது அவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. பொம்பரிப்பின் காலம் தமிழ்நாட்டு அரிக்கமேட்டுத் தொல்லியல் தலத்தின் காலம் எனக் கொள்ளலாம் என்று பொதுப்பட விமலா பெக்லி கருத்துத் தெரிவித்துள்ளார். பொம்பரிப்பு அடக்கங்கள் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனப் பேராசிரியர் ஸெனெவிரத்ன தெரிவித்துள்ள கருத்து கவனிக்கத் தக்கது. (தொடரும்)

# மும்பையில் மூன்று மணி நேரம்

### மும்பைப் பயணம்

இலங்கை வங்கி - தலைமையகமானது வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்ற வகையில் கடல் கடந்த பயிற்சிப் பட்டறை ஒன்றிற்காக என்னைத் தெரிவு செய்தது. இதன்பிரகாரம் 21.07.2008 தொடக்கம் 25.07.2008 வரை மும்பை நகரத்திற்கு அப்பால் ஏறக்குறைய 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புனே (Pune) என்னுமிடத்திலுள்ள வங்கி முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட கற்கை நெறிக்கென உருவாக்கப்பட்ட தேசிய ரீதியான (National Institute for Bank Management - N.I.B.M) கலாசாலைக்கு எனது வங்கியைச் சேர்ந்த தென்னிலங்கை நண்பர்கள் இருவருடன் பயணம் செய்வதற்கு வேண்டிய அனைத்தும் எனது தலைமைக் காரியாலயத்தினால் ஒழுங்குசெய்து தரப்பட்டன.

அவற்றுள் இருவழிப்பாதைக்கான விமானப் பயணம், சிறப்புக் காப்புறுதி, உத்தியோக பூர்வமான பயணப்பை (Briefcase) அறிமுக அட்டை (Visiting Card), பிரயாணத்தின் போதும் கற்கைநெறி காலத்திலும் ஏற்படும் நானாவித செலவுக்கான ஒரு தொகை அமெரிக்க டொடலர்கள் என்பனவும் அடங்கும். கற்கைநெறியின் போது அதி நவீன வசதியுடன் கூடிய தங்கு மறையும் வளாகத்திலேயே ஒவ்வொருவருக்கும் தனித்தனியே, மூன்று நேர உணவுகளுடன் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு இலங்கை வங்கி போன்று, வேறு வங்கிகளும் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை இது போன்ற ஸ்தாபனங்களுக்கு அனுப்பி பயிற்றுவித்து தத்தமது ஊழியர்களின் மனித வள மேம்பாட்டை மேற்கொள்வதும் அதனூடாக ஏனைய ஊழியர்களைப் பயிற்றுவிப்பதும் நடைமுறையில் இருந்துவரும் ஒரு விடயமாகும். இவ்வாறு பயிற்சிகளை வழங்குவதற்கு நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு பல மில்லியன் ரூபாய்களைச் செலவு செய்வதும் அனைவரும் அறிந்ததே.

### பிரயாண ஒழுங்கும் (Travel Arrangement) போராட்டங்களும்

எனது பிரயாண ஒழுங்கின்படி 19.07.2008 நடுநிசி அதாவது 20.07.2008 அதிகாலை 12.01 க்கு கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டு மும்பை விமான நிலையத்திற்கு அதிகாலை 20.07.2008 இல் 3.00 மணியளவில் அடைந்து, அதன் பின்னர் 20.07.2008 இல் காலை 9.30 மணியளவில் உள்ளூர் விமான சேவை மூலம் 30 நிமிட பிரயாணத்தில் புனே நகரை அடைவது என்பதாகும்.

என்னுடன் வரவேண்டிய இரு தென்னிலங்கை நண்பர்களாக இலங்கை வங்கி புறக்கோட்டை கிளையைச் சேர்ந்த Mr.S.T. Edirisinghe-Chief Manager, BOC-Pettah, மற்றும் வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த Mr.Nihal Gamage-Senior Area Manager Western Province North ஆகியோர் ஏற்பாடாகி இருந்தனர்.

**பயணக் கட்டுரை**

இரு வாரத்தின் முன்பே எனது பயண அனுமதிக்காக யாழ். மாவட்டத்தில் விண்ணப்பம் செய்தும் பலாலி தலைமையகத்துடன் தொடர்பு கொண்டும் ஒருவாறாக அனுமதியைப் பெற்று முதல் போராட்டத்தில் வெற்றி கொண்டேன். அதன் பின் யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்ல விமானச் சீட்டிற்காக ஒரு போராட்டம் எப்படியோ(Expo Air) எனக்கு கை கொடுத்து உதவியது.

13.07.2008இல் கொழும்பை அடைந்த எனக்கு அடுத்த போராட்டம் தங்குமிட.வசதி. 04 மணிநேரம் காவலிலிருந்து ஒருவாறு இராமகிருஷ்ண மிசனில் ஒரு இடம் பெற்றுக் கொண்டேன். அப்பாடா நிம்மதி என்று இருக்க முடியுமா? வெளிநாட்டுப் பயணத்திற்கான வேலைகளைக் கவனிப்பதற்கு தலைமைக் காரியாலயத்திற்கு அவசரம் போக வேண்டியிருந்தது.

ஆனால் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் பதியாமல் வெளியில் உலாவ முடியாது. எனவே அதற்கென ஒரு நாள் செலவு செய்து மிசனில் தங்கியிருந்த வேறு சிலருடன் காவல் நிலையத்தில் என்னையும் பதிவு செய்து அதன் போட்டோப் பிரதியை மிகக் கவனமாக எப்பொழுதும் என்னுடன் வைத்திருந்தேன்.

“அரிசிப் பொரியோடு திருவாரூர்” என்ற பழமொழிக்கிணங்க, உத்தியோகபூர்வமாக அல்லது தனிப்பட்ட தேவைக்காக யாழ். மாவட்டத்திலிருந்து கொழும்பு செல்பவர்கள் எமது வங்கிக் கிளைகளுக்குத் தேவையான காகிதாதிகள், கணனிப் பொருட்கள், வாடிக்கையாளருக்கான பரிசில் பொருட்கள் என்பவற்றை தலைமையகத்திலிருந்து பெற்று இங்கு கொண்டு வருவது வழக்கம்.

இந்த வகையில் ஏற்கனவே அங்கு நின்ற எமது உதவிப் பொது முகாமையாளர் B.A அருமைநாயகத்துடன் நானும் இணைந்து உயர் அதிகாரிகளை சந்திப்பதும் பொருட்களைப் பெறுவதுமாக 03,04 தினங்கள் கடந்துவிட்டன.

கடைசி நேரத்தில் தான் எனது நண்பருள் ஒருவரான எதிரிசிங்க முன்கூட்டியே மும்பைக்குப் போய்விட்டார் என்று செய்தி அறிந்தேன். அப்போதிருந்தே என்மனம் அங்கலாய்க்கத் தொடங்கியது.

அதாவது அவருடன் நானும் கூடப் போயிருந்தால் ஒரு நாளாவது மும்பையைப் பார்த்து விட்டு இவர்களுடன் இணைந்திருக்கலாம் என எனது ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட எமது பிரதிப் பொது முகாமையாளரும் (Deputy General Manager) சட்ட வல்லுனருமான M.கிரிதரன் என் விமானப் பயணத்தை ஒருநாள் முற்கூட்டி ஏற்பாடு செய்ய எங்கள் BOC Travel அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோதும் அது பலன் தரவில்லை. சரி கொடுத்து வைத்தது அவ்வளவு தான் கைக்கெட்டியும் வாய்க் கெட்டவில்லையே என என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்.

இவ்வாறு என் பயணம் தொடர்ந்தது என்னுடன் அடுத்த நண்பர் நிஹால் என்பவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இணைந்து கொண்டார்.

எம்முடன் இலங்கை வங்கியைச் சேர்ந்த இன்னுமொரு குழுவினரும் நாம் போகுமிடத்தில் வேறு பயிற்சி பெறுவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் இணைந்து கொண்டனர்.

### நினைத்தால் எதுதான் முடியாது?

குறிப்பிட்டபடி பயணம் 12.01 அதிகாலை ஆரம்பித்து இந்திய நேரப்படி மும்பை விமான நிலையத்தை அதிகாலை 2.45 க்கு சென்றடைந்தது. விமான நிலையத்தில் உள்ள வழமையான நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு 3.30 1



மணியளவில் வெளியே வந்து காப்போர் கூடத்தில் இருக்க ஆயத்தமாகும் வரை அடுத்த நாள் மு.ப. 9.30 மணி வரையான 6.00 மணி நேரத்தை எப்படி வீணே கழிப்பது அதுவும் சுற்றிப் பார்க்க வேண்டிய மும்பை நகரத்தி லேயே என்பதை எண்ணி எண்ணி என் மனம் ஒரு பக்கம் கவலையடைந்தபோதும், நினைத்தால் எதுதான் முடியாதது? எனும் துணிச்சலும் மேலோங்கி வளர்ந்தது.

இந் நிலையில் சுங்க அதிகாரி ஒருவரை அணுகி நான் இந்த 6.00 மணித்தியாலங்களுக்குள் மும்பை நகர்ப் பகுதியை சுற்றிப் பார்க்க வேண்டும் எனவும் என்னுடனான பயணப் பொதிகளையும் பாதுகாக்க வேண்டுமென்ற எனது எண்ணக்கிடக்கையை வெளியிட்டேன்.

ந.சிவரத்தினம்
உதவிப் பொதுமுகாமையாளர்
இலங்கைவங்கி–வடபிராந்திய காரியாலயம்.

ஆரம்பத்தில் அந்நியனான எனக்கு இந்த இரவு நேரத்தில் அங்கு பயணம் செய்வது ஆபத்தானது என்றும் அத்துடன் இருட்டு நேரத்தில் எதைப் பார்ப்பது என்றும் கூறி என்னுடைய ஆர்வத்தை கலைத்துவிட்டார். என்னுடைய நண்பரான நிஹால் அவர்களை காலைக்கடன்களை முடிப்பதற்காக அனுப்பி விட்டு அவர் வருகைக்காக காத்துக்கொண்டிருந்த எனக்கு இருப்புக்கொள்ளவில்லை. எனவே மீண்டும் அந்த அதிகாரியிடம் போய் பகல் நேரமாக இருந்தால் நான் பார்க்க வேண்டிய முக்கிய இடங்களை பட்டியலிட்டுத் தரும்படி எனது குறிப்புப் புத்தகத்தை நீட்டினேன்.எனது வேண்டுதலை மறுக்கமுடியாத அவர்Nariman Point எனும் மும்பையின் அதிமுக்கிய வியாபார மையத்தினையும் அதன்னைத் தொடர்ந்து சில இடங்களின் பெயரையும் குறித்துத் தந்தார். (தொடரும்)

# ஐ.நா.வின் கோரிக்கையை நிராகரித்தது இஸ்ரேல்

காசா பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விடுத்த கோரிக்கையைப் பொருட்படுத்தாது, இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டுவருகிறது.



14 நாட்களாகவும் காசாப் பகுதியில் பலத்த மோதல்கள் இடம் பெற்றுவரு கின்றன.

இதனை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 14 நாடுகள் ஒன்று கூடி ஆராய்ந்ததுடன், காசாப் பகுதி மீதான தாக்குதல்களை நிறுத்தமாறு இஸ்ரேலிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

காசாவிலிருந்து இஸ்ரேல் அதன் படைகளை மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்தது.

காசா மீதான தாக்குதல் குறித்து ஆராய்ந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில், அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் கொண்டலீசா ரைஸ், காசா பிரச்சினை தொடர்பில் எகிப்து மேற்கொண்டு வரும் முயற்சிகளை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகக் கூறியுள்ளார்.

இஸ்ரேல் தற்போது பலத்த விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் பல கட்டடங்கள் சேதமடைந் துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதுவரையில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களில் 780 க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுவர்கள் எனவும் அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக் கின்றன. (ஓ-6)

# சோர்வு ஏற்படும் போதெல்லாம் புத்தகங்களே புத்துணர்சி தருகின்றன

## அப்துல் கலாம்

(சென்னை)

எனக்கு சோர்வு ஏற்படும் போதெல்லாம் புத்தகங்களே புத்துணர்ச்சியைத் தருகின்றன என்று இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்ல புத்தகங்கள் கற்பனை சக்தியை வளர்க்கும். நல்ல கற்பனை சக்தி சிந்திக்கும் திறனை வளர்க்கும். நல்ல சிந்தனை சிறந்த அறிவை பெருக்கும். சிறந்த அறிவு நம்மை மேம்பட வைக்கும்.

புத்தகங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. திருக்குறள் உள்ளிட்ட 3 புத்தகங்கள் தான் என்னை வழி நடத்திச் செல்கின்றன.

ஒவ்வொரு புத்தகமும் ஒவ்வொரு கால கட்டத்தில என்னுடைய உற்ற நண்பனாக இருக்கின்றன. நான் சந்தோஷத்தில் திளைக்கும் போது என்னைக் கட்டுப்படுத்தி நல்ல காரியம் செய்ய புத்தகங்கள்தான் உதவின.

வாழ்க்கையில் இன்னல்கள் வரும்போது



இப்புத்தகங்கள் என் சோர்வை போக்கிபுத்துணர்ச்சி அளித்தன. தோல்வியைக் கடந்து வெற்றியடையச் செய்ய எனக்குஉற்று கொடுத்துஉதவின.

எல்லோரும்30 வயதுக்குள் உள்ள இளைய சமுதாயத்தை எழுதத்தூண்ட வேண்டும். இளைய சமுதாயம் நல்ல எண்ணங்களை உருவாக்கி பல இலட்சியக் கனவுகளை எழுத்து மூலம் மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

நான் சொல்லும் செய்தி என்னவென்றால் நீங்கள் ஒவ்வொருவரும் தினமும் ஒரு மணி நேரத்தை நல்ல புத்தகங்கள் படிக்க ஒதுக்குவீர்களானால் சில ஆண்டுகளுக்குள் நீங்கள் ஓர் அறிவுக்களஞ்சியமாக வளர்வீர்கள்.

புத்தகம் என்றென்றும் உங்களுக்கு ஓர் உற்ற நண்பனாக திகழும். இந்த ஒரு சிறிய முயற்சி நாட்டில் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கும் முதற்படியாகும் என அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# 'ஸ்பைடர்மான்' சித்திரக்கதையில் ஒபாமா




புதிய 'ஸ்பைடர் மான்' (சிலந்தி மனிதன்) சித் திரக்கதையில் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவின் கதாபாத் திரமும் இடம்பெறுவதாக மேற்படி புத்தக வெளி யீட்டு நிறுவனமான மார்வெல் கொமிக்ஸ் அறிவித்துள்ளது.

வோஷிங்கடனில் ஜனவரி 20 ஆம் திகதி ஒபாமாவின் பதவியேற்பு வைபவத்தின் போது, அவர் பதவியேற்பதைத்தடுக்க ஸ்பைடர் மானின் முன்னாள் எதிரியொருவர் முயற்சிப்பதை கருப் பொருளாகக் கொண்டு இந்தத் சித்திரத்தை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பைடர்மான். கதைகளின் தீவிர ரசிகரான ஒபாமாவை மையாமாகக் கொண்டு உருவாக்கப் பட்ட இந்த சித்திரக் கதையானது, எதிர் வரும் வாரம் விற்பனைக்கு வரவுள்ளது. (6)

# மும்பைத் தாக்குதல் தந்திரத்தையே தீவிரவாதிகள் முன்னோடியாகக் கொள்வர்

## அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம்

(வோஷிங்டன்)

மும்பைத் தாக்குதல் தந்திரத்தை தீவிரவாதிகள் முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு உலகம் முழுவதும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மும்பை தாக்குதல் சம்பவம் குறித்து அமெரிக்க உளவுத்துறையினர் நியூயோர்க் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு அமைப்புகள் எதிர்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். அது குறித்து தங்கள் கருத்தை அமெரிக்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் நவீன ஆயுதங்களுடன் அதிரடியாக வந்து குழு குழுவாகப் பிரிந்து திட்டமிட்டு தாக்குதலை நடத்தியது உலகை அதிர வைத்தது. அதைவிட 60 மணி நேரம் வரை ஓய்வின்றி தொடர்ந்து தாக்குதலை நடத்தியது தீவிரவாதிகளிடையே தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளது.

அது அவர்களுக்கு வெற்றியாக இருந்தாலும் எதிர்காலத்தில் திட்ட மிட்டு தந்திரத்துடன் தாக்குதலை நடத்துவதற்கு இதை முன்னோடியாக எடுத்துக்கொள்வர் என்று அமெரிக்கா பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளார்.

உயிர்ச்சேதம் ஏற்படுத்துவது மட்டுமன்றி பொருளாதார இழப்பையும் ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள். இது போன்ற சம்பவங்களை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்தற்காகத்தான் தாக்குதலுக்குக் காரணமானவர்களை கைது செய்ய வேண்டும் என்று தொடர்புடைய நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்துவருகிறோம்.

இல்லையேல் தாக்குதல் சம்பவங்கள் இனி வரும் காலங்களில் தீவிரவாதிகளால் நடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளின் தாக்குதல் சம்பவங்களை நேரடியாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதை மின்னணு ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் யோசனை தெரிவித்தனர். (ஓ-6)

## துயர் பகிர்கின்றோம்



### நாகலிங்கம் கந்தசாமி

(ESP நிறுவன முகாமையாளர்)

திரு. நாகலிங்கம் கந்தசாமி அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மு.பாலசுப்பிரமணியம்
குடும்பம், ஏழாலை

(சி/1974)


## திருமறைக் கலாமன்றம்

## கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2009 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

✦ *பிரதான பாடங்கள்*

வாய்ப்பாட்டு, நடனம் (பரதம்), நடனம் (கதகளி), மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், கிற்றார், ஓர்கன்(கீபோட்), சித்திரம், நாடகமும் அரங்கியலும் ( A/L 2011, தரம் , 10, 11)

✦ *சிறப்புப் பாடங்கள்*

- யோகாசனம்,
- அழகியல் கலை (Hair Style, Facial, Cake Icing, Saree work) - 3 மாதப் பயிற்சி
- ஆங்கிலம் (6 மாத சான்றிதழ் கற்கை நெறி)
- கண்டிய நடனம்

✦ *விசேட விரிவுரைப் பாடங்கள்*

- தமிழர் பண்பாடு -அழகியலும் சமயங்களும்
- தமிழர் பண்பாடு-அழகியலும் மெய்யியலும்

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி

இல. 128 டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 9419

(சி/1977)


## கண்ணீர் அஞ்சலி



### நாகலிங்கம் கந்தசாமி

(ESP நிறுவன முகாமையாளர்)

நாகலிங்கம் கந்தசாமி அவர்கள் 06.01.2009 செவ்வாய்க்கிழமை அன்று காலமான செய்தி கேட்டு பெரும் துயரடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

குடும்ப நண்பர்
பீ.துரைராசா,
(முன்னாள் சுபாஸ், றியோ தொழில் நுட்பவியலாளர்)

(சி/1975)

## பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள சிறுவணிக முகாமைத்துவ கற்கை நெறிக்கான பதிவுகளை மேற்கொள்ளவுள்ள மாணவர்களை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்துக்கு சமூகம் தருமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் வித்தியாசாலை அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் செ.சிவநடராசா கலந்துகொள்ளவுள்ளார். (6)

வல்வை சிவகுரு வித்தியாசாலையில் கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக முன்னாள் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் ஓய்வுபெற்ற செ.பரராஜசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ)

# யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கான விதை உருளைக்கிழங்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கால போகப் பயிற்செய்கையில் ஈடுபட்டுள்ள நலிவுற்ற விவசாயிகளுக்கு உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக 58 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழக்கு நெதர்லாந்து நாட்டில் இருந்து தருவித்து தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளிகளுக்கு விவசாயத் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். அரச அதிபரும் சமூக சேவைகள் அமைச்சும் இணைந்து விடுத்த கோரிக்கையின் பேரில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP), உலக உணவு விவசாய நிறுவனம் (FAO), புலம் பெயர்ந்




நெதர்லாந்திலிருந்து தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கினை சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்குவதைப் படங்களில் காணலாம்.

தோரிற்கான சர்வதேச நிறுவனம் (IOM) ஆகிய மூன்று நிறுவனங்களின் நிதி உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்விதம் தருவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கினை யாழ். அரச அதிபருடன் விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாய சேவை நிலையங்கள் இணைந்து உரிய விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றனர்.

மேற்படி திட்டம் தொடர்பாக ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீல் புருனே கருத்துத் தெரிவிக்கையில், "ஐக்கிய நாடுகளினால் பிரகடனப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு ஊக்குவிப்பு வருடமான 2008 இல் இவ்வாறு இணைந்த நிறுவனங்களின் முயற்சியானது நாட்டின் தொழில் உற்பத்தி, வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு என்பவற்றை உறுதிசெய்ய உதவும் எனவும்,

ஐ.நா. நிறுவனங்களின் உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான உதவிகள் இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு எதிர்காலத்தில் தொடர்ந்து முன்னெடுக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார். (ஓ-6)

# டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவன உயரதிகாரிகள் யாழில் சமூக சேவை அமைச்சருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கண்ணிவெடி அகற்றும் அமைப்பான டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் உயரதிகாரிகள் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ்ப்பாணத்திலுள்ள அவரது பணிமனையில் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினர்.

டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் அமைப்பின் ஆசிய பிராந்தியத்திற்கான தலைமை இயக்குனர் பிரட்ரிக் பல்சன், அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஸ்ரீன் வெற்லெசன், தொழில்நுட்ப அதிகாரி ரபீ தெயின் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.


ஏற்கனவே கொழும்பிலுள்ள சமூக சேவைகள் அமைச்சில் தாம் சந்தித்துக் கலந்துரையாடியதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும் இச்சந்திப்பினை மேற்கொள்வதில் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய டெனிஷ் கண்ணிவெடியகற்றும் அமைப்பின் உயரதிகாரிகள் தமது கடந்தகால பணிகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்து விளக்கினார்கள்.

அத்துடன் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளின் பேரில் யுத்தத்தினால் பாதிப்புற்ற சூடான், ஈராக் போன்ற நாடுகளில் கண்ணிவெடி அகற்றி உதவிய தமது அனுபவங்களைத் தெரிவித்துக் கொண்ட மேற்படி உயரதிகாரிகள் இலங்கை அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்போடு தமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதாக தெரிவித்தனர். மேலும் கண்ணிவெடிகள், பொறிவெடிகள் ஆகியவற்றை அகற்றுவது மட்டுமல்லாமல் வெடிக்காமல் உள்ள கைக்குண்டுகள், ரொக்கற்றுக்கள், மோட்டார் ஆட்லறி ஷெல்கள் என்பனவற்றையும் பாதுகாப்பாக அகற்றும் பணிகளையும் தாம் மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் உயரதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவரது . பணிமனையில்

டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் அமைப்பினர் வடபகுதியில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக அதன் உயரதிகாரிகளுக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்ட அமைச்சர் குடாநாட்டின் தென்பகுதியான முகமாலை முதல் ஆனையிறவு வரையிலான பிரதேசம் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அமைப்பின் சேவையானது பெரிதும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்ததுடன் இவர்களின் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்பு தருவதாகவும் தெரிவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ)



வண்ணை பெருமாள் கோவில் வடக்கு வீதியில் பிரதீபன் என்பருடைய வீட்டிற்குச் சென்ற நாகபாம்பையே படத்தில் காண்கிறீர்கள். நேற்றுமுன்தினம் சென்ற மூன்றடி நீளமான நாகபாம்பை வீட்டில் இருந்தவர்கள் பிடித்து கோட்டை முனியப்பர் ஆலயப் பகுதியில் பாதுகாப்பாக விட்டனர். இப் பாம்பை பெருமளவானோர் சென்று பார்வையிட்டனர்.

# க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

### தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**கலைப்பிரிவு**

3A–செ.குகப்பிரியா, கி.ரஜீவன், மு.தயாபரன், தே.திவ்யா
2A,B –இ.கவிதா,க.ஜானி, த.நிஷாந்திலதா, இ.கஜிதரன், ம.நிஷாலினி, த.மதுரா, இ.யுதர்சன், சொ.கௌதமி, கு.தரணீதன், தி.ஜாமினி, செ.நிரோஜ்
2A,C–பா.அபிஷாரிகா, ம.கனிதவதனி, செ.பிரபாலினி, ம.மலர்விழி
A,2B –பு.கீர்த்திகா, தி.லசிகா, மு.மேரிடயானா, க.விதுஷா, தெ.சஜீபன்
A,B,C –ஈ.மதனீசன்,சி.விதுஜன், சி.சாளினி, ந.கிறேஸ்நிஷாந்தினி, சி.கபிலினி,க.சோபிகா
A,B,S பா.சுஜானி, யே.முகுதாசகதீஸ்
A,2C –த.மலர்விழி, கை.மேனகா
3B– ம.பார்த்தீபன், நா.சசிகரன், செ.சாரங்கன்

**வர்த்தகப் பிரிவு**

3A– இ.பிரியதர்ஷினி
2A,B–மு.ஜனனி
A,2B–வ.மேரிடினேக்கா
A,B,C –த.பாமிலா
3B –க.சிவதையல்நாயகி
2B,C–ச.சத்தியவாணி, க.கேமபாரதி

**உயிரியல் பிரிவு**

2B,C–த.சுகன்ஜா
B,C,S–வி.விஜயஜங்கரன்
3C –ந.நிதர்சன்

**கணிதப் பிரிவு**

2B,C–து.கஜன், சொ.குருதரன்

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**கலைப்பிரிவு**

3A–ஜே.பிரசாந்தன், வி.ஜெனார்த்தனன், எஸ்.பிரேமலதா
2A,B –எம்.றஜந்தன்,கே.றஜந்தன், ஜே.சஞ்சுதா
2A,C–ர.ஜர்மிலா,ரி.நிரோஜினி
A,2B –ரி.கிருபா, சி.சோபன், ஜி.சயந்தா,கே.சுகன்யா
A,B,C –ரி.சர்மிலா

**வர்த்தகப் பிரிவு**

A,B,C –ரி.சுதர்சன்

**கணிதப் பிரிவு**

2B,C–ஆர்.ஜெகபரன்

**உயிரியல் பிரிவு**

2B,C–எம்.மகிலன் ,பி.அபிராமி
B,2C–எஸ்.ராதிகா
B,C,S –வை.கேசிகா

# வன்னியில் இடம்பெயர்ந்தவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணப் பொருட்கள்

## உலக உணவுத் திட்டம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்காக உலக உணவுத் திட்டத்தின் 2009ஆம் ஆண்டிற்கான முதலாவது உணவுத் தொகுதி வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

811 மெற்றிக்தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு 57 லொறிகள் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பைச் சென்றடைந்திருப்பதாக உலக உணவுத்திட்டம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் வன்னிக்கு தொடர்ச்சியாக உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகவும் தற்பொழுது 10ஆவது உணவுப் பொருள் தொகுதி அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

வன்னியில் இடம்பெயர்ந்திருக்கும் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்களை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உலக உணவுத் திட் டம் வழங்கி வருகிறது.

இதுவரை 6ஆயிரத்து 617 மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மேலதிகமாக தாம் 781மெற்றிக்தொன் அரிசியை இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பகிர்ந்தளித்திருப்பதாகவும் உலக உணவுத்திட்டம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையில் உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், பாடசாலை சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோருக்காக உலக உணவுத்திட்டம் 1.1 மில்லியன் பெறுமதியான உணவுப்பொருட்களை வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்திற்கான மதிய உணவு வழங்கும் திட்டம் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டுக்கான மதிய உணவு வழங்கும் திட்ட வலயமட்டங்கள் ஊடாக நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாக இருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நூறு மாணவர்களுக்கும் குறைவாகவுள்ள பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-2)

## விஞ்ஞான தினவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் விதாதா வள நிலையம் நடத்தும் விஞ்ஞான தின பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி,சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தன்,சிகௌரவ விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ. அகிலதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## தமிழகம் செல்லும் அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

(சென்னை)

இலங்கையில் இருந்து மேலும் 15 பேர் தமிழகத்திற்கு அகதிகளாக நேற்று முன் தினம் சென்றள்ளனர்.

தலை மன்னாரில் இருந்து அரிச்சல் முனை ஊடாக இந்திய கடற் பகுதிக்கு சென்றுள்ள இவர்களைத் தமிழக காவல் துறையினர் கைதுசெய்துள்ளனர். இவர்கள் விசாரணைகளின் பின்னர் மண்டப அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுவர்கள் என கியூ பிரிவு காவலதுறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த சில தினங்களாக இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் தமிழகச் செய்திகள் தெரிவிகின்றன. (ஓ-2)

## தென்மராட்சிப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக திருடர்கள் தொல்லை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டுவில் பகுதியில் நடமாடும் திருடர்கள், இரவில் வீடு மற்றும் தோட்டங்களில் பொருட்களை திருடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்தவாரம் மேய்ச்சலுக்கு மாடுகட்டிவிட்டு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் தாலிக்கொடியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுக்க முற்பட்ட போது, அப் பெண் சுக்குரலிட்டதால் திருடர்கள் முயற்சியைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். (ஓ-29)

## அரசியல் நோக்கத்துடனேயே புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது

### ஐ.தே.க.பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை அரசாங்கம் தடை செய்தமை அரசியல் உள்நோக்கத்தை அடிப்படையாக கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

சமாதானத்தில் ஈடுபாடில்லாத நிலையில் உள்ள பயங்கரவாத அமைப்பொன்றை தடை செய்வது சரியான விடயமாக இருந்த பொழுதிலும் அதனை எப்பொழுதோ செய்திருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கம் உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்திருப்பதானது முழுமையான அரசியல் நோக்கம் கருதியே மேற் கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களில் வெற்றி பெறும் நோக் கில் மக்கள் மத்தியில் யுத்தத்தை நியாயப் படுத் தும் நோக்கிலேயே இந்தத் தடையை இந்தத் தருணதில் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு குறிப்பிடப்பட்ட தகுதிகளையுடைய 17-25 வயதிற்குட்பட்ட மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ் தொழில் நுட்பக் கல்லூரி காரியாலயத்தில் பெற்று இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கற்கை நெறிகளின் விபரம் வருமாறு,

ஏந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் -இலத்திரனியல், மின்னியல், மோட்டார் வாகனம் திருத்துனர், வில் பற்றாசு பிடிப்பவர், நீர்குழாய் பொருத்துனர், மோட்டார் திருத்துனர், கட்டடதொழில் நுட்பநிர்மானவியல், கணக்கீட்டு தொழில் நுட்ப வியலாளருக்கான தேசிய சான்றிதழ் (NCAT), தட்டச்சு மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ்- (NCT), சந்தைப்படுத்தலில் தேசிய சான்றிதழ் (NCM), வர்த்தகம் கைத்தொழில் மற்றும் தொடரும் ஆங்கில கல்வியில் தேசிய சான்றிதழ் (NCE), தேசிய சான்றிதழ்- கணிய அளவையியல் (QS), தேசிய சான்றிதழ் படவரைஞர் (DA). (ஓ-4)

## புதிய வாக்காளர் இடாப்புக்களை பிரதேச சபைகளில் பார்வையிடலாம்

(சாவகச்சேரி)

யாழ் மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்புக்கள் சகல உள்ளூராட்சி சபைகளிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கபட்டுள்ளது.

வாக்காளர் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட 'பி' பெயர்ப்பட்டியலுடன் வாக்காளர் பெயர் பதிவேடு நீக்கப்பட்ட 'எ' பட்டியல் என்பன வைக்கபட்டுள்ளன.

ஜனவரி 31ஆம் திகதி வரை இவற்றை பொதுமக்கள் உள்ளூராட்சி சபைகளில் பார்வையிடலாம் என்று உதவி தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## பலாலி ஆசிரியர் பயிற்சி கல்லூரிக்கு அடிப்படை வசதிகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் நன்மை கருதி கலாசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு யாழ்.பலநோக்குக் கூட்டறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இச் சங்கத்தின் நலிவுற்றோர் அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நீண்ட காலமாக நிலவி வரும் குடிதண்ணீர், மலசலகூடம், மின் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகள் இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றிக் கொடுக்கப்படவுள்ளன. (ஓ-6)

## வன்னியில் தொடரும் தாக்குதல்களை அடுத்து மக்கள் விசுவமடு நோக்கி இடம்பெயர்வு

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான எறிகணை மற்றும் விமானத்தாக்குதல்கள் காரணமாக அங்கு மக்கள் மத்தியில் பெரும் பதற்ற நிலைமை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொட்டும் மழைக்கும் மத்தியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் விசுவ மடுப் பகுதியை நோக்கி பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதல்களினால் பொதுமக்கள் மத்தியில் உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளதுடன் பலரும் காயமடைந்து வருவதாகவும் அங்குள்ள சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து இன்று வரையான காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் 6 குழந்தைகள் உட்பட 29 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதல்களில் 36 பிள்ளைகள் உட்பட 200 பேர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ-6)

## அரச சேவையில் இணைந்துள்ள அநேகர் போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல்

(கொழும்பு)

அரச சேவையில் உள்ளவாங்கப்பட்டவர்களில் அநேகருக்கு கல்வித் தராதர சிக்கல்கள் இருக்கின்றன. சிலர் கணித பாடத்தில் கூட போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து சேவையில் இணைந்துள்ளனர். இது குறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன வியாழன் அன்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழன் அன்று பிரதான நடவடிக்கைகளின் பின் வாய் மூல வினாக்களுக்கான நேரம் ஒதுக்கப்பட்டது. இதன் போது அரச சேவைகளில் உள்வாங்கப்பட்டுள்ள அதிகாரிகளின் கல்வித் தராதரங்களை சவாலுக்குட்படுத்திய இடைக்கேள்வி யொன்றை ஜே.வி.பி.கேட்டது.

இதற்குபதிலளித்த போதே, அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரச சேவை களில் உள்வாங்கப்பட்டவர்களுள் அநேகருக்கு கல்வித் தராதர சிக்கல்கள் இருக்கின்றன. போலி ஆவணங்கள் சமர்ப் பித்து உள்வாங்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது. தகுதியற்றவர்கள் சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்றார்.

இதன்போது எழுந்த ஜே.வி. பி.யின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கூறுகையில்,

அரச சேவை யில் உள்வாங்கப்படுப வர்களின் தராதரங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு அக்கறை இல்லை. உதாரணமாக மிஹின் எயார் விமானக் கம்பனியின் நிறைவேற்று அதிகாரிக்கும் சாதாரண தரமே இருக்கின்றது.

இது தொடர்பிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ஓ-6)

# இஸ்ரேலைக் கண்டிக்கும் நாடுகள் இலங்கையை கண்டிக்காதது ஏன்?

## 'நிலவரம்' ஆசிரியர் தலையங்கம்

பாலஸ்தீனத்தின் காசா பிரதேசத்தின் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களைக் கண்டிக்கும் அனைத்துலக நாடுகள், இஸ்ரேலைப் போலவே தமிழீழப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கையை கண்டிக்காதது ஏன் என்று 'நிலவரம்' ஏடு கேள்வி எழுப்பியுள்ளது.

சுவிசில் இருந்து வெளிவரும் 'நிலவரம்' மாத இருமுறை ஏட்டின் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாலஸ்தீனத்தின் காசா பிரதேசத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையையும் அதில் அளவுக்கு அதிகமான பலப்பிரயோகம் மேற்கொள்ளப்படுவதையும் உலக நாடுகள் பலவும் கண்டித்துள்ளன. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இதற்கெனத் தனிவிவாதம்நடாத்தப்பட்டுவருகின்றது.

பாலஸ்தீன மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழ்பவர்கள். அவர்களது நிலம் ஏற்கனவே இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் டிசம்பர் 27 முதல் நடைபெற்று வரும் வான் குண்டு வீச்சுக்களும், அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள தரைவழி இராணுவ நடவடிக்கைகளும் இரண்டாவது ஆக்கிரமிப்பாக அமைந்துள்ளன.

'தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்பதைப் போன்று அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் கட்டுப்பாடற்ற ஆதரவைக் கொண்டுள்ள இஸ்ரேல், தனது செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டே அனைத்துலக சமூகத்தின் கண்டனங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தனது அடாவடித்தனத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அனைத்துலக போர் விதிகளுக்கு முரணாக பாடசாலைகள், மத வழிபாட்டு இடங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள் என கண்மூடித்தனமாக தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

ஐ.நா. சபையால் நிர்வகிக்கப்படும் பாடசாலையொன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் நடத்திய தாக்குதலில் பிள்ளைகள், பெண்கள் உட்பட 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உலகளாவிய ரீதியில் கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை பற்றி கவலைப்படாத இஸ்ரேல் தனது தாக்குதல்களை மூர்க்கத்தனமாகத் தொடர்ந்து வருகின்றது. காசா பிரதேசத்தை பல மாதங்களாக பொருளாதார முற்றுகைக்குள் வைத்திருக்கும் இஸ்ரேல், எகிப்து நாட்டு எல்லையில் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவதற்காகத் தோண்டப்பட்டுள்ள சுரங்கப் பாதைகளைக் கண்டுபிடித்து அழித்து வருகின்றது.

இஸ்ரேலிய உயர்நீதிமன்றம் காசா பகுதிக்குள் ஊடகவியலாளர்களை அனுமதிக்க வேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியிருந்தும் கூட அதனை மதித்து நடக்க இஸ்ரேல் முன்வரவில்லை.

இஸ்ரேல் காசா பகுதியில் எத்தகைய அராஜகத்தைப் புரிந்து வருகின்றதோ அதற்குச் சற்றும் சளைக்காத வகையில் இலங்கை அரசும் அதன் படைகளும் தமிழர் தாயகத்தில் அராஜகம் புரிந்து வருகின்றன. குடிமக்கள் மீதான வான் குண்டுத் தாக்குதல்கள், பாடசாலைகள், வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதல்கள், இடம்பெயர்ந்த மக்கள் மீதான கொத்தணிக் குண்டுத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடை என வகைதொகையற்ற தடைகள் இதுதவிர சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், காணாமற்போதல்கள், கடத்தல்கள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவு, ஊடக அடக்கு முறை என சகல விதமான அடக்கு முறைகளையும் மேற்கொண்டு தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பை இலங்கை அரசு நடத்தி வருகின்றது.

காசா மீதான இஸ்ரேலின் அராஜகத்தைத் தட்டிக் கேட்கும் உலக நாடுகளோ, ஐ.நா. சபையோ சிங்கள தேசத்தைக் கண்டிக்கவோ, தட்டிக் கேட்கவோ முன்வரவில்லை. மாறாக ஒரு சில நாடுகள் இலங்கை அரசின் இன ஒழிப்புப் போருக்கு நேரடி மற்றும் மறைமுக பொருண்மிய, படைத்துறை உதவிகளை நல்கி வருகின்றன.

ஏன் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை? புரியவில்லை. காசாவில் உள்ள மக்களே மக்கள் தமிழர்கள் மக்களில்லை என்பதா? அல்லது கேட்பதற்கு நாதியற்றவர்கள் என்பதுவா?

இத்தனைக்கும் தமிழர் தாயகத்தில் அட்டூழியம் புரியும் இலங்கைப் படைகள் இஸ்ரேல் தயாரிப்பான கிபீர் வானூர்தியில் பறந்துதான் தடைசெய்யப்பட்ட ரஷ்யத் தயாரிப்பான கொத்துக்குண்டுகளை வீசிவருகின்றன. இலங்கைக் கற்படையினர் இஸ்ரேலியத் தயாரிப்பான டோராப் படகுகளில் வந்துதானே கடற்றொழிலாளர்களைக் கொன்று குவித்து வருகின்றனர்.

காசாவில் உள்ள மக்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அங்கே இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோரி வரும் அனைத்துலக சமூகம் ஏன் தமிழர் தாயகத்தில் நடைபெறும் அராஜகத்தை மட்டும் கண்கொண்டு பாராமல் உள்ளது?

ஒத்த தன்மையுள்ள இரண்டு சமூகங்கள் விடயத்தில் இரட்டை அணுகுமுறையினை அனைத்துலக சமூகம் கடைப்பிடிக்குமானால் அறிவுரை கூறும் தகுதியை இழக்க வேண்டிய அபாயம் ஏற்படும். இது பாதிக்கப்படும் மக்களுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# தமிழர் இன அழிப்பை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதல்வருக்கு சுவிஸ் தமிழர் பேரவை வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழர் இன அழிப்பை உடனே தடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு முதல்வர் கருணாநிதிக்கு சுவிஸ் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுவிஸ் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுவிற்சர்லாந்து நாட்டில் வாழும் 43 ஆயிரம் ஈழத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுவிஸ் தமிழர் பேரவை, ஈழத் தமிழர் நலன் கருதி தாங்கள் மேற்கொண்டு வரும் தன்னலமற்ற பணிகளைப் பாராட்டுகிறது.

ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இந்திய மண்ணில் இருந்துகொண்டு குரல் கொடுப்பது ஆபத்தானது எனத் தெரிந்து கொண்டும், விளைவைப் பற்றி கவலைப்படாது தொப்புள் கொடி உறவுகளுக்காக ஓங்கிக் குரல் கொடுப்பது மெய் சிலிர்க்கச் செய்கிறது.

தமிழன் எங்கு வாழ்ந்தாலும் அவன் என் சகோதரனே என்ற உணர்வுடன் நீங்கள் ஆற்றுகின்ற பணி ஈழத் தமிழர்களால் என்றும் மறக்கப்பட முடியாதது.

தமிழன் வாழாத நாடு இல்லை, ஆனாலும் தமிழருக்கு என்றொரு நாடு இல்லை என்ற இழிச்சொல்லை மாற்றியமைப்பதற்காக, ஈழத்தில் உரிமை கோரிப் போராடும் தமிழ் மக்களுக்காக இன்று உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ்மக்கள் நேசக்கரம் நீட்டி வருகின்றார்கள். அந்த வரிசையில் தங்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தை நன்குணர்ந்து, தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற போரை நிறுத்தி தமிழ் மக்களை இன அழிப்பிலிருந்து காப்பதற்காக தமிழக சட்டசபையில் நீங்கள் நிறைவேற்றிய தீர்மானமும், அதனைத் தொடர்ந்து புதுடில்லி சென்று பாரதப் பிரதமரை நீங்கள் சந்தித்துக் கோரிக்கை வைத்ததும் ஈழத் தமிழ் மக்கள் மனங்களில் பாலை வார்த்தது.

இவற்றைத் தொடர்ந்து, காரியங்கள் வேகமாக நடக்கும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கொழும்பு செல்வார், போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றெல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால், நாம் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மாறாக, தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் முன்பைவிட அதிகரித்துள்ளன.

இந்திய மத்திய அரசின் கொள்கையைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. சமாதான வழி முறையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தி வரும் இந்தியா, மறுபுறத்தில் சிங்கள தேசத்திற்குப் படைத்துறை உதவிகளை வழங்கி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ள இன்றைய தருணத்தில் தமிழர் தாயகத்தில் நடைபெறும் இன அழிப்பு போரை உடன் நிறுத்தவும், இது தொடர்பிலான இந்திய மத்திய அரசின் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கையின் ஊடக சுதந்திரம் குறித்து அனைத்துலக சமூகம் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் குறித்து அனைத்துலக சமூகம் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

இதில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் றொபேர்ட் வூட் தெரிவிக்கையில், லசந்த மற்றும் எம்.ரி.வி.மீதான தாக்குதல் என்பது இலங்கையில் சுயாதீனக் குரல்களை ஒடுக்கும் திட்டமிட்ட ஒரு நடவடிக்கையே என்றும் ஐரோப்பிய வெளி விவகாரங்களுக்கான ஆணையாளர் பெனிட்டா பெர்ரே, லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை கடும் அதிர்ச்சியளிக்கிறது. தனியார் தொலைக்காட்சி நிறுவனம் மீது தாக்குதல் நடந்த இரண்டு நாட்களின் பின்னர் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அண்மைக்காலமாக ஊடக நிறுவனங்களுக்கு தீவைத்தல், ஊடகவியலாளர்களை அச்சுறுத்தல் ஆகிய சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்து வருகின்றன.

இலங்கையில் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை மஹிந்த அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத், இலங்கையின் ஊடக ஜனநாயக சுதந்திரத்தை சீர்குலைக்கும் வகையிலேயே எம்.ரி.வி.தாக்குதல் மற்றும் லசந்த படுகொலை சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இத்தாக்குதலில் ஈடுபட்டோர் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். அத்துடன் உலக வங்கியின் அறிக்கையில்,ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல் குறித்து சுயாதீனமான வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் படுகொலைகள் கவலையளிக்கின்றன என்றும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில்,ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் வன்மையாக கண்டனத்துக்குரியது. இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அரசாங்கத்தின் தலையீடுகள் மற்றும் தனியார்மயமாக்கல் ஊழல்களை அம்பலப்படுத்தியவர் லசந்த விக்கிரமதுங்க, அதேபோல் இலங்கையின் மனித உரிமை மீறல்களையும் வெளிக்கொணர்ந்தவர் என்றும் தெரிவித்துள்ளன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் அனைத்துலக நீதிபதிகள் ஆணையம் ஆகியவையும் எம்.ரி.வி.மற்றும் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. (ஓ-6)

# இந்தியப் பிரதமரின் நடவடிக்கை — கண்டனத்திற்கு உரியது —

## மலேசியத் தமிழ் அரசியல்வாதி இராமசாமி

(கோலாலம்பூர்)

இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுகின்றமை தொடர்பில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங், எதுவித நடவடிக்கையும் எடுக்காமையானது கண்டனத்திற்கு உரியது என மலேசிய தமிழ் அரசியல்வாதியான இராசாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதை கண்டிக்காத மன்மோகன் சிங், காஸாவில் பாலஸ்தீனர்கள் கொல்லப்படுவது குறித்து கவலைப்படுவதாக இராமசாமி குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற புலம்பெயர்ந்து வாழும் இந்தியர்களின் நிகழ்வில் பங்கேற்ற அவர், மலேசிய தமிழர்கள், இலங்கை தமிழர்கள் கொல்லப்படுவதற்கு கண்டனம் தெரிவிக்கும் நிலையில் இந்தியப் பிரதமர் ஒரு அறிக்கையை கூட வெளியிடாமை வருத்தத்திற்குரியது எனக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

# கண்ணீர் அஞ்சலி

# அமரர் நாகலிங்கம் கந்தசாமி



## அண்ணாவே எங்கு சென்றனை?

தந்தையின் ஆசனத்திருந்து ஆசானாய் நல் தொழில் விருத்தி புகட்டி சக ஊழியரை சகோதர நேயத்துடன் பழகி நல் வாழ்வியல் கருத்துக்கள் பல இயம்பி தோழமையுடன் எம்மை ஆற்றுப்படுத்திய அண்ணாவே எங்கு சென்றனை உம் குரல் தொலைபேசியில் ஒலித்த வண்ணம் எமது இதயத்தில் மறக்க முடியுமா?

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
சேவையாளர்கள்.

## ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

எம் தந்தை எமக்களித்த நிறுவனத்தோடு பெறுமதிமிக்க முத்தாகிய நா. கந்தசாமி அவர்கள் கண்ணை இமை காக்க மறந்தாலும் நிறுவனத்தை தன் மூச்சாக கொண்டு எண் நான்கு ஆண்டுகள் இனிதே இன்முகத்துடன் பொறுப்புக்கள் அனைத்தையும் தனதாக்கி கலக்கமோ , சலனமோ இன்றி வியாபாரத்துறையில் சகலரும் மெச்சும் வண்ணம் நடாத்தி இன்று எமைப் பிரிந்து மீளாத்துயில் கொண்ட செய்தி எம்மை உலுப்பியது. அவர் தம் சேவையை வார்த்தையில் எடுத்து இயம்ப முடியாது தவிக்கின்றோம்.

அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு ஆறுதல் அளிக்கும் இவ் வேளையில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூசணித்தாயை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம் மற்றும்
கஜமுகன் காட்வெயர்
உரிமையாளர், குடும்பத்தவர்.

(C/1973)

மற்றவர்கள் செய்ய முடியாததை செய்து முடிக்க கூடிய ஆற்றலை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பெற்றிருக்கிறார்கள்.

*~ பேர்னார்ட்ஷா*

வலம்புரி

## யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளரின் முன் பாரிய பொறுப்பு

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக வைத்திய கலாநிதி இ.தேவநேசன் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னதாக பணிப்பாளராக இருந்த வைத்திய கலாநிதி ஞானசோதி இடமாற்றம் பெற்று புதிய பணிப்பாளர் பதவியேற்கிறார் என்ற செய்தி வெளிவந்தபோது,

புதிய பணிப்பாளருக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பணியாளர்கள் ஒத்துழைப்பு வழங்கி எமது வைத்தியசாலை திறம்படச் செயற்பட உதவ வேண்டும் என இப்பகுதியில் எழுதியிருந்தோம். அது எழுதப்பட்ட காலம் நீண்டதாகிவிட்டதன் அடிப்படையில் மீண்டும் அவை ஒரு கணம் இங்கு மீட்டுக் கொள்ளப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாண மக்களின் உயிர்காக்கும் நிலையம். இங்கு

# மும்பையில் பலியான 280 பேருக்காக பாகிஸ்தான் மீது போர் தொடுக்க விரும்புவோர் ஈழத்தமிழருக்காக குரல் கொடுக்காதது ஏன்?–வைகோ

நான் அன்றும் இன்றும் என்றும் விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமானவன். இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி கூறினார்.

சென்னை திருவள்ளுவர் மாவட்டத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வைகோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், காங்கிரஸ்காரர்கள் வைகோவை கைது செய்யவேண்டுமென்று கூறுகிறார்கள். அவர்கள் கூட்டணியில் இருந்தபோது ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்காக, ப.சிதம்பரத்துக்காக வாக்குச் சேகரிக்கச் சென்றபோது இந்த வைகோ விடுதலைப் புலிகளின் ஆதரவாளன் என்று தெரியாதா?

கடந்த நான்கு வருடமாக மன்மோகன்சிங் அரசு இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு விடுதலைப் புலிகளையும் இலங்கைத் தமிழர்களையும் அழித்து வருகிறது.

தமிழர்களையும் விடுதலைப்புலிகளையும் அழிக்க இலங்கைக்கு இராணுவ உதவிகள், ராடர் போன்ற கருவிகளை வழங்கியுள்ளது.

இந்திய அரசு அளித்த ஆயிரம் கோடி ரூபாயைக் கொண்டு இலங்கை அரசு பாகிஸ்தானிடம் ஆயுதங்களைப் பெற்று இலங்கையில் இந்த தமிழினப் படுகொலையை செய்து வருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற நாடுகள் இனப் படுகொலையைச் செய்ய இலங் கைக்கு உதவி வருகிறது.

மும்பை தாஜ் ஹோட்டலில் நடந்த தாக்குதலில் 280 பேர் பலியானதற்கு பாகிஸ்தான் மீது போர்தொடுக்க வேண்டுமென்று பேசுகிறவர்கள் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்



எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இலங்கை ஜனாதிபதி டெல்லிக்கே வந்து போர் நிறுத்தம் செய்ய மாட்டோம் என்று கொக்கரித்து விட்டுச் சென்றிருக்கிறார். இதையும் மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது என்று கூறினார் வை.கோபாலசாமி. (ந-5)

## மட்டு. தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரான தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர் தம்பிராசா ரவீந்திரன் (வயது 50) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் அதிகாலை தனது வீட்டிலிருந்து நாவற்குடாவில்



Lifeline
மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்
Humanitarian Information For IDPs

# அதிகரித்து வரும் தேவைகளுக்கு மத்தியில் அல்லலுறும் வன்னி மக்கள்

வன்னியில் அண்ணளவாக 2 இலட்சத்து10 ஆயிரத்து 961பேர் இடம்பெயர்ந் துள்ளதாக அரச அதிபர்களின் புள்ளி விபரங்களை மையப்படுத்தி அரசாங்கம் தெரிவித்துள் ளது.

வன்னியில் தற்பொழுது நான்கு இலட்சத்து இருபதாயிரம் பேர் வரை வாழ்ந்து வருகின்றனர். 2 இலட்சத்து51ஆயிரத்து600 ஹெக்டேர் விஸ்தீரனமுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்பொழுது 2 இலட்சத்து 15 ஆயிரம் பேர் வாழ்கின்றனர். அம் மாவட்டதிலுள்ள 5 பிரதேசப் பிரிவுகளில் ஒட்டிசுட்டான், மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய்ப் பிரிவுகளில் இருந்து மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ளனர். கரைத் துறைப்பற்று செயலகப் பிரிவில் அரைவாசி மக்கள் வெளியேறியுள்ளனர். தற்போது மக்கள் புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, உடையார்கட்டுப் பகுதிகளில் அதிக செறிவுடன் வாழ்ந்து வருகின்றனர்.

வன்னியிலுள்ள மக்களுக்கு இரண்டரை இலட்சம் கிடுகுகள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்கத்தினாலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடனும் இந்தக் கிடுகுகள் வவுனியா அரச அதிபருக்கு வழங்கப்பட்டன. அவை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. தற்காலிகக் கூடாரங்களுக்கான தேவைகள் கிடுகளின் பயன்பாட்டின் மூலம் நிறைவேற்றப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன்னியைப் பொறுத்த வரையில் விசாய செயற்பாடு பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன் ஏற்பட்ட பெருவள்ளம் காரணமாக விவசாய செய்கை மிகப் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக மரக்கறிக்கான விலை திடீர் என அதிகாரித்துக் காணப்படுகிறது. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எமல்டா சுகுமார் தெரிவிக்கையில், சுமார் 40 ஆயிரம் ஹெக்ரேயர் பாசனத்திட்டத்தின் கீழ் வழமையாக விவசாயம் செய்து வந்தோம். இந்த ஆண்டு மோதல்கள் ஏற்படுகின்ற பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களுக்கு விஸ்தரிக்க திட்டமிட்டிருந்தோம். மகாபோகம் ஆரம்பித்த வேளையில் சுமார் 11ஆயிரம் ஹெக்ரேயர் நிலம் நெற்பயிர்ச் செய்கைக்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.



கிளிநொச்சி, பரந்தன் பகுதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி இடம்பெயர்ந்து செல்லும் மக்களைப் படத்தில் காணலாம்.

ஆனால், தற்போது அவையும் கைவிடப்பட்டிருக்கின்றது. முக்கியமாக முத்தையன் கட்டு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழும், தண்ணீ முறிப்பு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழும் உள்ள வயல் நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன. அதைப் போன்றே ஏனைய வயல் நிலங்களும் கைவிடப்பட்டுள்ளன என்றார்.

மக்களின் கேள்வி அதிகரித்திருப்பதாலும் வளங்கல் குறைவடைந்திருப்பதாலும் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது சிரமாக இருப்பதாக முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்தார்.

மரக்கறி விலைகள் 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் 25 ரூபா முதல் 35 ரூபா வரை காணப்பட்டது. தற்போது முக்கிய மரக்கறிகளின் விலை 700 ரூபாவுக்கும் அதிகரித்துக்காணப்பட்டாலும் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடும் நிலவுகிறது. இதனை கருத்தில் கொண்டு அரச அதிபர்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.


வவுனியா கூட்டுப்படைத்தலைமை இராணுவத்தளபதியுடன் கடந்த வாரத்தில் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தோம். வாரத்தில் இரு முறை ஒழுங்கமைக்கப்பட்ட உணவுப் பொருட்களை எடுத்துச்செல்லும் போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு லொறி வீதம் மரக்கறிகளை எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வவுனியா அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் அண்ணளவாக இரண்டு இலட்சம் மக்கள் வாழ்வதாக கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவ் வைத்தியசாலையில் 8 வைத்தியர்களும், 14 தாதியர்களுமே கடமைபுரிவதால் ஏனைய வைத்தியர்கள் விரும்பும் பட்சத்தில் வன்னியில் சேவையாற்ற வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தப்பகுதியைச் சேர்ந்த வைத்தியர்கள் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற தென் பகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்களும் உறவினர்களும் இங்கே இருப்பதனால் ஒரு குறிப்பிட்ட காலம் இங்கே வந்து கடமை புரியுமாறு அண்மையில் ஒரு வேண்டுகோளை மிக அன்பாக விடுத்திருக்கின்றோம். ஒரு சிலர் இந்தப்பகுதிக்கு கடமையாற்ற வருவதாக உறுதியளித்திருந்தார்கள். வெகு விரைவில் வன்னிக்கு இவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது என சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

## வெண்கட்டிப் பாவனையால் பாதிக்கப்படும் ஆசிரியர்கள்



ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. வீட்டில் இருக்கும் நேரத்தை விட பாடசாலையில் இருக்கும் நேரமே வளரும் பிள்ளைகளுக்கு சிறந்த பயனைத் தரக்கூடியது. கற்பித்தலுக்கான சிறந்த சாதானமாக ஆசிரியர்கள் கரும் பலகையையும் வெண்கட்டியையும் பயன்படுத்தினாலும் கூட அதிலிருந்து வெளியேறும் சுண்ணாம்பு மற்றும் சிலிக்கன் துணிக்கைகள் ஆசிரியர்களின் உடலுக்கு கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றன என்பது கவலைக்குரிய விடயமாகும்.



சுண்ணாம்பு, காபன், சிலிக்கன் போன்ற மூலப் பொருட்களைக் கொண்டு செய்யப்படும் இந்த வெண்கட்டிகள் எழுதும் போது சிறு துணிக்கைகளாக உடைந்து காற்றில் பரவக்கூடியன. இதனால், 5 முதல் 6 வீதமான ஆசிரியர்களுக்கு பல்வேறு சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் தொண்டைப் புற்று நோய் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன என்கிறார் தேசிய புற்று நோய் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்.


அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தொடர்ச்சியாக இந்த வெண்கட்டிகளைப் பயன் படுத்தும் போது வெளியாகும் தூசு துணிக்கைகள் உடலுக்குள் செல்வதனால் கண் எரிச்சல், நாசியிலிருந்து நீர் வடிதல், தொட்ச்சியான தும்மல், தொண்டையில் அரிப்பு ஏற்படுதல் போன்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவற்றிலிருந்து வெளியாகும் சிலிக்கன் துகள்கள் உடலுக்குள் சென்று சுவாசப் பாதையில் படிக்கின்றன. காலப்போக்கில் அதாவது 20-25 வருடங்களின் பின்னர் அவை படிந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள இழையங்கள் அதீதமாக பிரிவடைகின்றன. இதனால் *மீசோ தீலியோமா*எனப்படுகின்ற புற்று நோய் உருவாக வாய்ப்புண்டு என்றார் அவர்.

## சுவடுகள்

☆ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 157 ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 9 ஆயிரத்து 780 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 909 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

☆ யாழ். குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முழுமையான அளவில் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகள் இணையம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக அரச அதிபருக்கு அவசர மஜர் ஒன்றையும் இந்த அமைப்பு வழங்கி இருக்கின்றது. தற்போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு வார காலத்திற்கான நிவாரணப்பொருட்கள் மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது.

☆ வன்னியில் இருந்து வவுனியாவுக்கு இது வரை 659 பேர் இடம்பெயர்ந்து இருப்பதாகவும் இவர்கள் செட்டிக்குளம், மெனிக்பாம், நெலுக்குளம் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும் மெனிக்பாம் பகுதியில் முதல் கட்டமாக 100 குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காக புதியகொட்டகைகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவு னியா மாவட்ட அரசாங்க அதிபர் சார்ள்ஸ் தெரிவித்திருக்கின்றார்.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலியூடாக சனிக் கிழமைகளில் காலை 6 மணிமுதல் 8 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எவ்.எம். வானொலியூடாக (F.M. 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1.30 மணி முதல் 2 மணி வரையும் புத்தளப் பிரதேசத்தின் அநூர் எவ்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW.Internews.lk.Radio.Voices of peace.lk) என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

மீண்டும் வாழ்வோம்
"மீண்டும் வாழவோம்"
திட்டமானது இலங்கையின்
அசாதாரண
சூழ்நிலைகளினால்
இடம்பெயர்ந்து முகாம்களில்
வாழும் மக்களுக்காகவும்
மீள்குடியேறி உள்ள
வர்களுக்காகவும்
தகவல்களை வழங்கும்
பரந்து பட்ட மனி தாபிமான
செயற்றிட்ட அமைப் புக்களின்
ஓர் அங்கமாகும்.

உங்கள்எண்ணங்களை
பகிர்ந்து கொள்ளுங்கள்
மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.


த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

# முத்தரப்புத் தொடர்

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது சிம்பாவே அணி

## சிகும்புரா அரைச்சதம் கைகொடுத்தது



(மிர்பூர்)

முத்தரப்பு தொடரின் முதலாவது போட்டியில் சிம்பாவே அணியிடம் 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வீழ்ந்தது.

பங்களாதேஷ், சிம்பாவே மற்றும் இலங்கை அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடைபெறுகிறது.

இதில் மிர்பூரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ், சிம்பாவே அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி ஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களையிழந்து 123 ஓட்டங்களை மாத்திரமெடுத்து திணறியது.

எனினும் சகலதுறை வீரர் சிகும்புராவின் அரைச்சதத்தின் மூலம் சிம்பாவே அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 205 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிகும்புரா 95 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 64 ஓட்டங்களையும் மஸ்கரன்ஸி 39 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீப் அல்ஹசன், இஸ்லாம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மோர்டாஷா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 206 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 167 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் சகீப் அல்ஹசன் 52 ஓட்டங்களையும் ரகீபுல் ஹசன் 23, அலாம் 22 மற்றும் இஸ்லாம் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உற்ஷயா, பிரைஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரெயின் போர்ட், டபேன்ஹவா, சிக்கும்புரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர்கள் மூவர் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தனர். இவ்வெற்றியின் மூலம் சிம்பாவே அணி 4 புள்ளியைப்பெற்று முதலாவது இடத்திலுள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சிம்பாவே அணியின் வெற்றிக்கு வழியமைத்த சிகும்புரா தெரிவானார்.

தொடரில் நாளை நடைபெறும் இரண்டாவது போட்டியில் இலங்கை-சிம்பாவே அணிகள் மோதுகின்றன.

(5)

# விறுவிறுப்பான நான்காவது போட்டி வருண பகவானின் குறுக்கீட்டால் ரத்து

## கப்டிலின் கன்னிச் சதம் வீணானது



(ஆக்லாந்து)

அறிமுக வீரர் மார்டீன் கப்டில் சதம் விளாசியும் நான்காவது ஒருநாள் போட்டி மழை காரணமாக பாதியில் கைவிடப்பட்டது.

இதன் மூலம் மீதம் ஒரு போட்டி உள்ள நிலையில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்று தொடர் சமனிலையிலுள்ளது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 2 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட், இருபது-20 போட்டித் தொடர்கள் சமனிலையில் முடிபடைந்த நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி மழையால் கைவிடப்பட்டதுடன் அடுத்த இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப்பெற்று தொடர் 1:0 என்ற கணக்கில் சமனிலையிலுள்ளது.

இந்நிலையில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று ஆக்லாந்தில் நடை பெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று மேற்கிந்தியதீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அறிமுக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்டீன் கப்டிலின் கன்னி சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அறிமுக வீரர் மார்டீன் கப்டில் 135 பந்துகளில் (8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 122 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்து கன்னி சதத்தை பூர்த்தி செய்ததுடன் ஒருநாள் போட்டி வரலாற்றில் முதலாவது போட்டியில் அதிக ஓட்டங்கள் பெற்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையும் பெற்றார்.

இதற்கு முன்னர் மேற்கிந்தியதீவுகள் வீரர் ஹெயின்ஸ் தனது முதலாவது போட்டியில் 148 ஓட்டங்களைக் குவித்தார்.

நியூசிலாந்து அணி சார்பில் பிளைன் 75 ஓட்டங்களையும் மக்குலம் 26 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் பாகர் 2 விக்கெட்டுக்களையும் எட் வோட்ஸ், பவல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 276 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மேற்கிந்தியதீவுகள் அணி 8.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 47 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழையின் குறிக்கிட்டால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் ஒரு மணித்தியாலத்தில் மழைவிட மீண்டும் ஆட்டம் ஆரம்பமான போது டக்வேத் லூயிஸ் முறையில் மேற்கிந்தியதீவுகள் அணிக்கு 40 ஓவர்களில் 235 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி 10.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 64 ஓட்டங்களை எடுத்த போது மீண்டும் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது.

தொடர்ந்து மழை இடைவிடாது பெய்தமையால் ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர்.


துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியதீவுகள் அணி சார்பாக ஹயில் 46 ஓட்டங்களையும் சற்றர் கோன் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இரு அணிகளுக்கிடையி லான ஐந்தாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறுகிறது.

(5)

# டெஸ்ட் போட்டிகளைப் பார்வையிட மாணவர்களுக்கு இலவச அனுமதி

## டெண்டுல்கர் புதிய யோசனை




(புதுடில்லி)

டெஸ்ட் போட்டியை கண்டு ரசிக்க பாடசாலை மாணவர்களுக்கு இலவச அனுமதி வழங்க வேண்டுமென நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆலோசனை தெரிவித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் மீதான ஆர்வம் அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு ரசிகர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்து வருகிறது. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் டெஸ்ட் கிரிக்கெட், எதிர்காலத்தில் அழிந்து விடும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

சமீபத்தில் இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே மொகாலியில் நடந்த டெஸ்ட் போட்டிக்கு பாடசாலை மாணவர்களை இலவசமாக அழைத்து வந்து மைதானத்தில் நிரப்பினார்.

கடந்த வாரம் சென்னையில் ரஞ்சித் கோப்பை அரைஇறுதி நடந்தது. இதில் ரசிகர்களின் வருகை மிகமோசமாக இருந்தது குறித்து இந்திய அணி வீரர் சச்சின் கவலை தெரிவித்திருந்தார்.

தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்ற கிரிக்கெட் நிர்வாகிகளுக்கு புதிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து சச்சின் கூறியதாவது; ஒருநாள் மற்றும் இருபது-20 கிரிக்கெட்டை எதிர்கால சந்ததியினருக்காக பிரபலப்படுத்துகிறோம்.

ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டையும் பாதுகாக்க வேண்டும். இதற்காக மைதானத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கு முழுவதும் இலவசமாக திறந்து விடலாம்.

**முதல் உணர்வு**

மாணவர்களுக்கு டெஸ்ட் கிரிக்கெட் பற்றிய உணர்வுகளை ஏற்படுத்த இது மிகவும் முக்கியம். டெஸ்ட் கிரிக்கெட் பற்றி முதல் முதலாக அவர்களுடைய எண்ணத்தில் பதியும் நினைவுகள், வாழ்க்கை முழுவதும் நீடித்து நிலைத்திருக்கும். எதிர்காலத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டை பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்க இது உதவும். இவ்வாறு சச்சின் தெரிவித்தார்.

**அதிக எதிர்பார்ப்பு**

இது குறித்து ஐ.சி.சி தலைவர் டேவிட் மோர்கன் கூறுகையில்; சமீபத்திய அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் காணப்பட்ட விறுவிறுப்பு டெஸ்ட் போட்டி மீதான எதிர்பார்ப்பை அதிகரித்திருக்கிறது. வீரர்கள் போட்டியை அனுபவித்து விளையாடினர். எதிர் காலத்தில் முன்னாள் மற்றும் தற்போதைய வீரர்கள் தங்களது தரத்தை ஒப்பிட்டுக் கொள்ள டெஸ்ட் கிரிக்கெட் உதவும். ரசிகர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். இவ்வாறு மோர்கன் தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## வீரமணி, ராமதாஸ், திருமாவளவன் முக்கிய சந்திப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்காக திராவிடர் கழகத் தலைவர் வீரமணியை பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸும் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனும் நேற்று திடீரென சந்தித்துப் பேசினார்கள்.

வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

காலை 10.30 மணி முதல் பகல் 12 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இனி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இப் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகளை எவ்வாறு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என்பது குறித்தும் முக்கிய ஆலோசனை நடைபெற்றது.

அத்துடன் ஈழ ஆதரவுக் கட்சிகள் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைள் மற்றும் போராட்டங்கள் குறித்தும் இத்தலைவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கட்சிகளின் தலைவர்கள் ஒருங்கிணைந்து முக்கிய ஆலோசனை நடத்தியிருப்பது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (ந-5)

## யுத்தத்தில் அப்பாவித்...

களுக்கு உரிய பாதுகாப்பினை அரசு அளிக்க வேண்டும். அப்பாவிகள் உயிர் இழப்பது அதிகரித்து வருகின்றது. நவம்பர் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 24 அப்பாவிகள் சண்டையில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இது கவலை தருகிறது.

கிழக்கு மாவட்டங்களான திருகோண மலை மற்றும் மட்டக்களப்பிலிருந்து 2இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வெளியேற் றப்பட்டுள்ளனர். தற்போது அவர்கள் மீண்டும் தங்களது பகுதிகளுக்கு திரும்பி வருகின்றனர்.

ஆனால் தாங்கள் முன்பு போல சுதந்திரமாக நடமாட முடியவில்லையென்றும் ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகவும் இந்த மக்கள் குறை கூறுகின்றனர்.

இவ்வாறு திரும்பி வந்த 50 குடும்பங்கள் அரசாங்கத்தின் கெடுபிடிகள் காரணமாக மட்டக்களப்பிலிருந்து மீண்டும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

மற்றவர்களும் கூட தங்களது வீடுகளில் தனித்துத் தூங்க முடியாமல் மொத்தமாக சேர்ந்து தங்கும் அவலம் உள்ளது. இப்பகுதிகளில் வாழும் அனைத்து மக்களிற்கும் உரிய பாதுகாப்பு தரப்பட வேண்டியது அரசின் கடமையாகும் இதேபோல தமிழகத்திலிருந்து இலங்கைக்கு திரும்பி வந்த 4 அகதிகள் திருகோணமலை மாவட்டத்தில் கடத்தப்பட்டுள்ளனர்.

இது கவலை தருகிறது. கடந்த ஆண்டு மட்டும் தமிழகத்திலிருந்து ஆயிரத்து 500 அகதிகள் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளனர்.

இது வரும் ஆண்டிலும் தொடருமென எதிர்பார்க்கிறோம். இவர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் மறு வாழ்வு நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும்.

இலங்கையின் வடக்கில் நடந்துவரும் சண்டையை ஐ.நா அகதிகள் ஏஜென்சி உன்னிப்பாக கவனித்து வருகிறது. (ந-5)

## லசந்த...

ளதாகவும், இக்கொலைச் சம்பவத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## யாழ்-கண்டி...

கிளிநொச்சி மற்றும் ஆனையிறவுப் பகுதிகளை படையினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து யாழ்-கண்டி ஏ-9 பாதை முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இருபத்து மூன்று வருடங்களின் பின்னர் ஏ-9 பாதை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் தேசிய தொலைக்காட்சி மூலம் ஜனாதிபதியின் மேற்படி அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் ஏ-9 பாதை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

பொதுமக்களின் போக்குவரத்துக்கு ஏ-9 பாதை எப்போது அனுமதிக்கப்படும் என்பது பற்றி எந்தத் தகவலையும் அரசு வெளியிடாத போதிலும் ஏ-9 பாதையில் திருத்த வேலைகள் இருப்பதாகவும் அப்பகுதியில் உள்ள மிதிவெடிகள் அகற்றும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பெப்ரவரி நான்காம் திகதி இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுடன் ஏ-9 பாதை பொதுமக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படலாம் என்ற ஊகங்கள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17.07.1927

விண்ணில் 16.12.2005



அமரர் கணபதிப்பிள்ளை கணேசன்

திதி: பிரதமை

(11.01.2009)

முழுதாக மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும்
முத்தான உங்கள் முகம் மனம் விட்டகலாது
சித்தராம் சிவனடியில் சிவலோக வாழ்வு பெற
அத்தனை பேரும் இங்கு ஆண்டவனை வேண்டுகிறோம்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

-குடும்பத்தினர்

(C-1982)

நாளை ஆரம்பம்

A/L Day Class

(வர்த்தகப் பிரிவு)

காலை 9.00 மணி

DMI நாவலர் வீதி, யாழ்.

A/L 2011 Commerce Unit

English Medium Classes to begin soon.
Please register before 20th January.

DMI Navalar Road, Jaffna.

DMI நிர்வாகம் விடுக்கும் அவசர வேண்டுகோள்

ஜனவரி 13ம் (செவ்வாய்) திகதிக்கு முன் தனியார் கல்வி நிலையத்திற்கு பயன்படுத்தக் கூடிய மாணவர்களுக்கான வாங்குகளும், மேசைகளும், கொட்டகைகளும் தேவைப்படுகின்றன. பொருத்தமானவர்கள் பின்வரும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகம் -
DMI
நாவலர் வீதி, யாழ்.

அனைவருக்கும் நன்றி

DMI

YOGI'S BEAUTY

The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன

1. அழகுக்கலை பயிற்சிகள் (Beauty Culture- Facial Classes)
2. ஒப்பனை, தலை அலங்காரங்கள் (Bridal Make- up and Hair Styles)
3. மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் (Fondant Icing & Sugar Art on fondant Strctures)
4. கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (Cake Icing and sugar flowers)
5. நவீன முறையில் 5 விதமான சாறிபிளவுஸ் கட்டிங்கள் (Latest Saree Blouse cuttings)

ஆரம்பம் :- 17.01.2009 காலை 10 மணி

பயிற்சிகள் முடிவில் Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

MRS. YOGINI SHANMUGANATHAN.
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make -up & Character make-up (India)
Diploma in Home Economics (India and SriLanka)

T.Phone:- 021 2222796
0602210077
0777164923
0712510025

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன்கோவில் முன்பாக)

(C-1981)




Spoken English & Grammar

Campus அனுமதி கிடைத்தோருக்கான விசேட வகுப்பு

காலம்:- 1 மாதம் (தினசரி 2 hrs -Weekdays)
ஆரம்பம்:- 12.01.2009
By: Mr.B.Ruban (BBA)
திரு, கோண்டாவில் (9 am)
திகழ், இணுவில் (11 am)

(2092)

Missed the E-faculty! Leave the worries! SONA - A Perfect place, more than your expectation!

Be An Engineer in 2013 May

A/L Result வந்துவிட்டது! Engineering கிடைக்கவில்லையா? 2013ல் நீங்களும் ஒரு ENGINEER

Cousers Offered:
Bachelor of Engineering (BE)
- Electronics & Communication Engineering
- Information Technology
- Electrical & Electronics Engineering
- Computer science & Engineering
- Civil Engineering
- Mechanical Engineering
- Fashion Technology

ELEGIBILITY A/L 3 PASSES (Maths Stream)

A/Lல் 3 Cக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு கட்டணத்தில் விஷேட சலுகை.......

இந்தியா அரசினால் அங்கீகரிக்கப்பட்ட All India Council For Technical Education (AICTE)இனால் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள 04 கல்லூரிகளில Sonaவும் ஒன்று.

SONA College is rank 27th among more than 2000 Engineering Colleges in INDIA
Sona college rank 5th under the Anna University

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

Director-International Admissions, Sona College of Technology, Selam-636005.Tamilnadu,INDIA

V4 Educational Consultancy (Pvt) Ltd
"Catalyst for your higher studies"

Head Office- #7-1/1,W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06, 0773867257

#274, Pointpedro Road, Aanaippanthi Junction,Jaffna. 0212228374, 0775936343.

Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.